பக்கங்கள் :எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 13 புதன்கிழமை (27.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 210

நோர்வே, இந்தியா ஏனையவை எதற்கு?

# இலங்கைப் பிரச்சினையில் பிறநாடுகள் தலையிடக் கூடாது என்கிறது பாகிஸ்தான்

## சொந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதனை அனுமதிப்பதே உகந்த வழி என்கிறார் தூதுவர் ஷாகஸாட் சௌத்திரி

கொழும்பு,ஜூன் 27

இலங்கைப் பிரச்சினையில் பிறநாடுகள் தலையிடக் கூடாது. தனது சொந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதனை அனுமதிப்பதே உகந்த வழி.

இலங்கை தனக்கு எது சிறந்தது என்பதனைத் தெரிவு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். பாகிஸ்தானோ, இந்தியாவோ, நோர்வேயோ அல்லது வேறு எந்தப் பிற நாடுமோ இலங்கையின் உள் விவகாரத்தில் ஏன் தலையிட வேண்டும்?

இவ்வாறு கொழும்பில் உள்ள பாகிஸ்தானியத் தூதுவர் ஷாகஸாட் சௌத்திரி கேள்வி எழுப்பி விடையும் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில், இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தில் ''ஊடக ஒழுக்க நெறி'' என்ற பொருளில் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று நடைபெற்றது. தமிழ் பேசும் மகளிர் ஊடக அமைப்பின் அனுசரணையுடன் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு பேசுகையிலேயே பாகிஸ்தானியத் தூதுவர் மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கையின் பிரச்சினைகளை எந்த வெளிநாட்டாலும் தீர்த்து வைக்கவே முடியாது. இந்தியா, நோர்வே மற்றும் வெளி நாடுகளின் தலையீடு நியாயமற்றது. அந்தந்த நாடு தத்தமது பிரச்சினையைத் தீர்த்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் இளைஞர் சூட்டுக்குப் பலி

மன்னார்,ஜூன் 27

பேசாலைப் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை சுமார் 8 மணியளவில் கடற்படையினர் பேசாலை எட்டாம் வட்டாரப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர். இச்சமயம் இரண்டு இளைஞர்கள் கடற்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என

(08 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே.....
5ஆம் பக்கத்தில் கல்விச்சுடர் தரம் 5 மாணவருக்கு புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாள்

## பிரிட்டிஷ் பிரதமராக கோடன் பிறவுண் இன்று பதவியேற்பு



லண்டன் , ஜூன் 27

பிரிட்டிஷ் பிரதமராக தொழில் கட்சியின் தலைவரான கோடன் பிறவுண் இன்று பதவியேற்கின்றார்.

இதுவரை காலமும் பிரதமராக இருந்த ரொனி பிளயர் இன்று பதவி விலகுகிறார். விசேட உரை ஒன்றை நாடாளுமன்றத்தில் ஆற்றிவிட்டு பதவி விலகுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பிரதமராக பதவியேற்கும் பிறவுண், சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகத் தாம் முன்னெடுக்கவுள்ள திட்டங்களை வெளியிடுவார்.

இதேவேளை-
பதவி விலகும் ரொனி பிளேயரை மத்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பிமலைப் பிரதேசத்தை மீட்க முன்னேறுகிறது இராணுவம்; கிழக்கில் விடுதலைப் புலிகள் மீதான இறுதித் தாக்குதல் இதுவாம்

கொழும்பு, ஜூன் 27

கிழக்கில் விடுதலைப்புலிகளின் கடைசித்தளம் என்று இராணுவம் கூறும் குடும்பிமலையை (தொப்பிகல) பிரதேசத்தை மீட்பதற்கான இறுதிக்கட்டத் தாக்குதல் தற்போது நடத்தப்பட்டு வருவதாகப் படை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தாக்குதலின் உச்சக்கட்டமாக அடர்ந்த - சிக்கலான - காட்டுப்பகுதிகளுக்குள் படைகள் புகுந்துள்ளன என்றும், பெரும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்றும் பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடக நிலையம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கை மீட்பதற்காக கடந்த ஆண்டு ஜூலை இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவத்தின் மனிதாபிமான நடவடிக்கை வெற்றிகரமாக முன்னோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றது.

தொப்பிகலவை மீட்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கை தற்போது முன்னேற்றம் கண்டுள்ளது. சிக்கலான அடர்ந்த காட்டுப் பகுதிகளில் துருப்புகள் தற்சமயம் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளன.

கண்ணி வெடிகளை அகழ்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள முன்னேறும் துருப்புகளால் விடுதலைப்புலிகளின் சிறு முகாம்களும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று தினங்களாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டைகளின் போது, தீவிரவாதிகளால் கைவிடப்பட்ட முகாம்களிலிருந்து 472 ஆட்களுக்கு எதிரான கண்ணிகள், 12 அமுக்க வெடிகள், 5 தாங்கி எதிர்ப்புக் குண்டுகள் ஆகியவை துருப்புகளால் மீட்கப்பட்டுள்ளன.

கைவிடப்பட்டதும் எரிக்கப்பட்டதுமான உடைமைகளையும், வாகனங்களையும் மேலும் துருப்புக்கள் அவதானித்துள்ளன. புலிப் போராளிகள் இதற்குப் பின்னரே இப்பகுதியைக் கைவிட்டு வெளியேறியுள்ளனர்.

அதேவேளை, பங்குவெல் - நரக்கா

(08 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் முன்நகர்வு நடவடிக்கை அம்பாறையில் புலிகளால் முறியடிப்பு

கொழும்பு,ஜூன் 27

அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடு தலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்துக்குள் விசேட அதிரடிப்படையினர் நேற்று மேற்கொண்ட முன்நகர்வை தாம் முறியடித்துள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை பக்திமுட்டியா பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் சுமார் 2.45 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் முன்நகர்வு முயற்சியினை மேற்கொண்டனர்.

அந்தவேளை, சுற்றுக்காவல் நடவடிக்கை பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளுடன் மோதல் ஏற்பட்டது. விடுதலைப் புலிகள், விசேட அதிரடிப்படையினர் மீது பதில் தாக்குதலை நடத்தி அந்த இடத்தில் இருந்துவிரட்டியடித்தனர்.

அதன்பின்னர் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடைபெற்ற பகுதியில் தேடுதல் நடத்தினர்.

இதன்போது விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவரின் சடலமும் ,ரி - 56 ரக துப்பாக்கி மற்றும் வெடிபெருள்களையும் மீட்டனர் என்று விடுதலைப் புலிகளின் இர்ராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

(சி)

## விடுதலைப் புலிகளின் விமானப் படையை இந்தியா மிக உன்னிப்பாக அவதானிக்கிறது

### விமானப்படைத் தளபதி பாலி ஹோமி மேஜர்



புதுடில்லி,ஜூன் 27

விடுதலைப் புலிகளின் விமானப் படையை இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.

இந்திய விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் பாலி ஹோமி மேஜர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் விமானப் படை குறித்து என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது விமானப் படையின் முதலாவது தாக்குதலை இந்த வருடம் மார்ச் மாதத்தில் ஆரம் பித்தனர். ஸ்ரீ லங்காவின் பிரதான வான்படைத் தளத்தை அப்போது தாக்கியிருந்தனர். அதன் பின்னர் எவ்வித இழப்பும் இன்றி இரண்டு தடவைகள் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினர்.

இந்திய விமானப்படைத் தளபதி தமது பேட்டியில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## முழங்காவில் பகுதியில் நேற்று ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதல்

கிளிநொச்சி,ஜூன் 27

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முழங்காவில் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஊடுருவிய ஆழ ஊடுருவும் படையினர் கிளைமோர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

வாகனம் ஒன்றை இலக்கு வைத்து மரம் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்ட கிளைமோரே வெடிக்கவைக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் சிக்கிய வாகனம் பலத்த சேதமடைந்தது. அதன் சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார்.

வாகனத்தில் வேறு எவரும் பயணம் செய்யவில்லை எனக் கூறப்பட்டது.

முழங்காவில் பகுதியில் தொடர்ந்து ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதல்கள் இடம்பெற்று வருவது [illegible]

## வவுனியாவில் இருந்து சென்ற வாகனத்தில் டீசல் தாங்கியில் கிளைமோர் கண்ணி!

### ராஜகிரியவில் வைத்து மூவர் கைது

கொழும்பு, ஜூன் 27

கொழும்பு, புறநகர்ப்பகுதியான ராஜகிரிய ஒபயசேகரபுரம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றிலிருந்து 20 கிலோகிராம் நிறையுடைய கிளைமோர் குண்டு ஒன்றை படையினர் மீட்டுள்ளனர். இதனையடுத்து வாகனச்சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்றுப் பகல் 12.30 மணியளவில் வீடொன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'கப்' ரக வாகனத்திலிருந்தே இக் கிளைமோர் குண்டை படையினர் மீட்டனர். மூவரைக் கைது செய்தனர்.

குண்டு பொருத்தப்பட்டிருந்த வாகனம் வவுனியாவில் இருந்து வந்துள்ளது என்றும் படையினர் கூறியுள்ளனர்.

அது கிளிநொச்சியைச் சேர்ந்த உள்ளூ

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் அஞ்சலி

அமரர்

## சீனிவாசகம் சரவணபவன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.08.1942 | 27.05.2007 |

எமது சக ஊழியரும், நண்பனுமாகிய சரவணபவன் சந்தோஷ் அவர்களின் அன்புத் தந்தையின் மறைவை யொட்டி எமது அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
ஹற்றன் நஷனல் வங்கி,
சுன்னாகம், மானிப்பாய்.

(62265)

# மரண அறிவித்தல்

## *திருமதி சச்சிதானந்தம் நாகரத்தினம்*
## *(ராசா மாமி)*

அல்வாய் வடக்கு, விராவோடையைச் சேர்ந்த திருமதி சச்சி தானந்தம் நாகரத்தினம் நேற்று (26.06.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இரத்தினம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான துன்னாலை யைச் சேர்ந்த நாகமுத்து - அம்மன் குட்டி தம்பதியரின் மருமகளும் சச்சிதானந்தத்தின் மனைவியும் திருமதி சிவபாக்கியம், அமரர் அம்பிகாபதி, விவேகானந்தன் (யாழ்.மாநகர சபை), திருமதி அருந்ததி, மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் ஜெய ராஜசிங்கம் அவர்களின் மைத்துனியும் பிறைசூடி (ஆதார வைத் தியசாலை, வல்வெட்டித்துறை), திருமதி பிரகதீஸ்வரி, பிரிதிவிராஜ் (சுவிஸ்), பிரணவன் (ஆதார வைத்தியசாலை, மந்திகை) ஆகி யோரின் தாயும் ஜெகதீஸ்வரன், திருமதி பிறைசூடி றதி, திருமதி பிரிதிவிராஜ், சுகந்தி (சுவிஸ்). திருமதி பிரணவன் வசந்தகுமாரி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2007) புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அல்வாய் பங்கு வேம்படி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரணவன் (பொருள்).

# தவறிவிட்டது

வீரகத்தி திருச்செல்வம் என்பவருடைய உடுப்புகள் அடங்கிய (Travaling bag) கறுப்புநிற பாக் 25.06.2007 திங்கட்கிழமை காங்கேசன்துறைமுகத்திற்கும் தெல்லிப் பழை சோதனை நிலையத்திற்கும் இடையில் தவறி விட் டது. தவறுதலாக மாறி எடுத்தவர்கள் அல்லது கண்டெடுத் தவர்கள் றூபி ஜூவலறி, 111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவ வும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 222 2828

# கோழி இறைச்சி விற்பனை

ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், கல்பேட்ஸ், ஊர் சேவல், விறாத்து குஞ்சுகள் என்பன மலிவா கப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: *மல்சி பாம் சென்ரர்,*
*61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.*
(61878)

# இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
## பிருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

(சி-52523)

அடிப்படைத் தகைமை க.பொ.த (உ/த) 2 பாடங்களில் சித்தி

பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன

**Company Secretarial Services(Pvt.)Ltd.**

285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

# கடை வாடகைக்கு உண்டு

நெல்லியடிச் சந்தியில் பஸ் நிலையத்திற்கு முன்பாக கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: இ.எ.ஆனந்தராஜா
'பிறேமஸ்ரன்'
கரவெட்டி.
T.P.No. 226 3208

(61818)

# விற்பனைக்கு

புதிதாக அமைக்கப்பட்ட 6 அடி டீ பிரிஜ் விற்பனைக்குண்டு

தொடர்பு: பிள்ளையார் மில்,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(61818)

# யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
## நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் - 2007

காலம் : 29.06.2007 வெள்ளிக்கிழமை
நேரம் : முற்பகல் 10 மணி
இடம் : மேபீள் தம்பையா மண்டபம்

**பிரதம விருந்தினர்கள்**

வைத்திய கலாநிதி
**இரத்தினசிங்கம் சிவசங்கர்**
(வைத்திய அதிகாரி, இரத்த வங்கி)

வைத்திய கலாநிதி
**திருமதி யோகபீன் திருமகள் சிவசங்கர்**
(தாய் சேய் நல வைத்திய அதிகாரி)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி-52767) - கல்லூரிச் சமூகம்.

# உடுவில் மகளிர் கல்லூரி உயர்தர மாணவர் கவனத்திற்கு

2007 க.பொ.த.உயர்தர மாணவிகள் அனைவரும் இன்று (27.06.2007) காலை 8.30 மணிக்குப் பாடசாலைக்குச் சமுகமளிக்கவும்.

- அதிபர்

(சி-52764)

யாழ். குடாவில் முதன் முறையாக அறிமுகமாகின்றது....!

**PMC** யின்

## *Master Of English - VCD System*

"வீட்டிலிருந்தே இலகுவாக ஆங்கிலத்தில் பேசுவதற்கான 30 நாள் பயிற்சி" ஆங்கிலம் கற்க நேரமில்லை என ஏங்கும் தொழில் புரிபவர்கள், மாணவர்கள், ஆங்கிலம் கற்க நேரமில்லாத இல்லத்தரசிகள், வகுப்பறையில் சேர்ந்து கல்விகற்க கூச்சமுள்ள பெரியோர்கள், இளைஞர், யுவதிகள் அனைவரும் வீட்டில் இருந்தபடியே VCD பார்த்து 30 நாள்களில் சரளமாக ஆங்கிலம் பயில ஒரு சிறந்த திட்டம்.

*முற்பதிவுகள் நடைபெறுகின்றன.*

*இன்னும் சொற்ப பிரதிகளுக்கே முற்பதிவுகள் செய்யப்படும்.*

மேலதிக விபரமறிய:

| | |
|---|---|
| PMC தலைமையகம் : | 443, ஸ்ரான்லி வீதி , யாழ்ப்பாணம். |
| கமலக்கண்ணன் திருமண சேவை : | 171/7, மனோன்மணி அம்மன் வீதி, நல்லூர். |
| K. சஜினா: | 190ஆம் கட்டை, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. |
| சி.விஜயகௌரி: | விளாத்தியடி ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு. |
| ந.நிலாஜா: | உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| டெ.டெனிஸ்ரா : | 27/5, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம் |

(61950)

இலங்கை வங்கி

# மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 30.04.2006 இற்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை<br>யாழ்.2 மேற்தரக்கிளை<br>திருநெல்வேலி<br>ஊர்காவற்றுறை<br>காரைநகர்<br>மானிப்பாய்<br>சுன்னாகம்<br>(அச்சுவேலி விரிவாக்கற் கிளை உட்பட)<br>காங்கேசன்துறை<br>நெல்லியடி<br>பருத்தித்துறை<br>சாவகச்சேரி | யாழ்.மேற்தரக்கிளை யாழ்ப்பாணம். 2007 யூலை மாதம் 7 ஆம், 8ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையை ஒன்றிணைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

26.06.2007

உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை வங்கி (வடபிராந்தியம்),
உதவிப்பொது முகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
021 222 3126,021 222 2735

(சி/52766)

# மரண அறிவித்தல்

## விஸ்வநாதர் தெய்வேந்திரம்



தங்காலய வீதி, தும்பளையைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமாகிய K.V தெய்வேந்திரம் அவர்கள் 25.06.2007 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விஸ்வநாதர் தம்பதியரின் புதல்வனும் சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் தர்மகுலேந்திரன், காஞ்சனா, மேனகா, மகேந்திரன், குலேந்திரன், ரவீந்திரன், புலேந்திரன், சுசீலா, புவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதராதேவி, யோகராசா, சற்குணராசா (சுசிலா ஆபரண மாளிகை), வாசுகி, நாகஜோதி, பத்மினி, சுபத்திராதேவி; காலஞ்சென்ற பாலேந்திரா மற்றும் விஜயலதா ஆகியோரின் மாமனும் தனுஜா, சுகீந்திரன், சிந்துஜா, கவிதா, குகப்பிரசாத், கஜேந்திரன், றஜீந்திரன், கார்த்திகா, தர்சிகா, ஜேந்திரன், மனோப்பிரியா, தனுப்பிரியா, சயிந்தா, றியானி, தனுசி, தக்சி, சோபிகா, பிறின்சிகா, டஜீந்திரன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் காலஞ்சென்றவர்களான திரவியம், இராசா (குமாரசுவாமி), அமிர்தலிங்கம், இராசம்மா, சிங்காரம் பாலசுந்தரம், சின்னத்துரை மற்றும் பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2007) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இந்தியாவில் திருச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

C44, மூன்றாம் குறுக்குத்தெரு,
தில்லைநகர்,
திருச்சி, இந்தியா.
(62257)

*தகவல்:*
**ந.சற்குணராசா** *(மருமகன்)*
*சுசீலா ஆபரணமாளிகை, பருத்தித்துறை.*
**021 226 4755.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



*மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட*

**அமரர் வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை (J.P)**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02.10.1937 | 28.05.2007 |

கடந்த 28.05.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (27.06.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இராசன் கடையடி, இராச வீதி, நீர்வேலி. (62259) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 10 மாணவர்களுக்கான பாடநூல்கள் போதியளவு வராததால் கல்வி நிலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

பாடசாலைகளில் தரம் 10 வகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தில் விருப்பத்திற்குரிய பாடங்களுக்கான பாடநூல்கள் அனேக மாணவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

குறிப்பிட்ட அளவு பாடநூல்களே யாழ். மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதால் அவை பாட ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விருப்பத்திற்குரிய பாடங்களான புவியியல், குடியுரிமைக் கல்வி, முயற்சியாண்மை, விவசாயமும் தொழில்நுட்பமும், மீன்பிடி உணவுத் தொழில்நுட்பம், ஆக்கத்திறனும் தொழில்நுட்பமும், கலைத்திறன், மனைப் பொருளியல், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகியவற்றுக்கான நூல்கள் மிகக் குறைந்த அளவே யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன. இதன் காரணமாக மாணவர்களுக்கு நூல்களை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கல்வி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தரம் 7இற்குரிய கணிதம், ஆங்கில மாணவர் நூல், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், வரலாறு, குடியுரிமைக் கல்வி ஆகிய பாடநூல்களும் -

தரம் 8இற்குரிய வரலாறு , புவியியல், குடியுரிமைக் கல்வி ஆகிய பாடநூல்களும் - தரம் 9 இற்குரிய சுகாதாரமும் உடற் கல்வியும் தரம் 2 இற்குரிய கணித செயல்நூல், தரம் 3,4 ஆகியவைக்குரிய ஆங்கில செயல் நூல் ஆகியவையும் யாழ் மாவட்டத்திற்கு எடுத்துவரப்படவில்லை.

கல்வியாண்டின் 6மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் குறிப்பிட்ட பாடநூல்கள் வந்து சேராததால் மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்படைந்துள்ளது.

(202-207)

# சுகாதார முறைப்படி கருவாடு தயாரிக்க காரைநகரில் பதனிடும் நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

பசுபிக் ஆசிய மூலவள நிறுவனத்தால் காரைநகரில் சுகாதார முறையிலான கருவாடு பதனிடும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

பிரதேசத்தில் சந்தைப்படுத்தமுடியாத மீன் வகைகளைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் கருவாடாகப் பதப்படுத்தி விற்பனை செய்வதன் ஊடாகப் பயனாளிகளின் வருமானத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

மக்களுக்கு கடல் உணவுகளைப் பெறுவதில் உள்ள தட்டுப்பாட்டையும் இத்திட்டத்தின் மூலம் ஓரளவேனும் நிவர்த்தி செய்ய முடியும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாகப் பயனாளிகளுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. அவசியமான அடிப்படை வசதிகளும் வழங்கப்படவுள்ளன. (1-202)

## பண்டிதமணியின் 108ஆவது பிறந்த தினம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 108ஆவது பிறந்த தினம் இன்றாகும். இவரது பிறந்த தினத்தையொட்டி வெகுவிரைவில் பண்டிதமணி எழுதிய 'திருவருட்பயன் உரை' நூல் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (203)

## தொகைமதிப்பு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான 'தொகைமதிப்பு 2007'' தொடர்பான செயலமர்வு இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். (1-207)

# ஆசிரியர்களுக்கான கல்வித் திட்டத்தில் நவீன தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும்

## நேற்று ஆரம்பமான மாநாட்டில் ஆராயப்படுகிறது

கொழும்பு,ஜூன் 27

ஆசிரியருக்கான கல்வித்திட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கான திட்டங்களை வரைவதற்கு கல்வித் துறைத் தலைவர்களின் மாநாடு ஒன்றை ஐ.நா. கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார ஸ்தாபனம்(யுனெஸ்கோ) நடத்துகிறது.

நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கையில் இந்த மாநாடு ஆரம்பமானது. இது நாளை வரை நடைபெறவுள்ளது.

நான்கு ஆசிய நாடுகளிலிருந்து கல்வித் துறையாளர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

மைக்ரோ சொப்ற், ஜப்பானிஸ் பன்ற்ஸ் - ட்ரஸ்ற், சிஸ்கோ சிஸ்ரம் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையோடு யுனெஸ்கோ, பாங்கொக் நிறுவனம் இந்தக் கல்வியாளர்களின் மாநாட்டை நடத்துகிறது.

இலங்கை, இந்தியா, கம்போடியா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் ஆசிரியர் கல்வி நிறுவனங்களிலிருந்து கல்வித்துறைத் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

ஆசிரியர்களின் அடுத்த தலைமுறையினர் என்ற யுனெஸ்கோ திட்டத்தின் கீழ் நடைபெறும் இந்த மாநாட்டில் கல்வித் துறையினர் ஆசிரியர் கல்வியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் உள்ள சவால்கள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படும். (அ-ப)

## தென்மராட்சி மாணவர்களுக்கு விஞ்ஞான அலகுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 11 மாணவர்களுக்கான விஞ்ஞான அலகுப் பரீட்சை நாளை வியாழக் கிழமை நடத்தப்படவுள்ளன.

இப்பரீட்சைக்குரிய வினாத்தாள்களை இன்று புதன்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202-207)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 15 மாணவர்கள் மதிப்பளித்துக் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் வித்தியாலய அதிபர் இ.இராகவன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா மற்றும் வகுப்பாசிரியை ஆகியோரைப் படத்தில் காணலாம். (275)

# தேசிய சமாதானப் பேரவை நடத்தும் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்27

தேசிய சமாதானப் பேரவை 'பேச்சுவார்த்தையினூடாகச் சமாதானம்' என்னும் தலைப்பில் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளது.

14-16 மற்றும் 16-18 வயதுகளுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இரு பிரிவாக இப்போட்டி நடத்தப்படும்.

'யுத்தம் மற்றும் மோதல் நிலைமைகளில் இளைஞர்களே பெரும்பாலும் அகப்படுகின்றனர்', 'சமாதானத்தை மேம்படுத்துவதில் இவர்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம்?', 'சமயத்தாலும் கலாசாரத்தாலும் சமாதானத்துக்கான பாலத்தை அமைக்க முடியும்', 'சமயம் மற்றும் கலாசாரம் மூலமாக சமாதானத்தை எவ்வாறு மேம்படுத்தலாம்' ஆகிய நான்கு தலைப்புகள் கட்டுரைப் போட்டிக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

கட்டுரைகள் பிரதேச செயலர்/ கிராம சேவகர்/பாடசாலை அதிபர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியுடன் பெயர், முகவரி, பிறந்த திகதி, மாவட்டம், தொலைபேசி இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டு ஜூலை 30 ஆம் திகதிக்கு முன்னர் 'பிரபோதினி, தேசிய சமாதானப் பேரவை,12/14, புராண விகாரை பாதை, கொழும்பு 6' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதலாம்பரிசாக 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் மாவட்டத்தில் இருவர் என்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டு 2 ஆயிரத்து 500 ரூபா ஆறுதல் பரிசிலும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203)

# யாழ். ஊர்காவற்றுறையில் கைதான இருவரை தடுத்துவைக்க அனுமதி

கொழும்பு, ஜூன் 27

ஊர்காவற்றுறை, ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலுக்குள் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இதற்கான உத்தரவை கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள திலகரத்தின நேற்று முன்தினம் விடுத்தார்.

சிவராமலிங்கம் மனோகரராஜ குருக்கள், நடராஜா ஜெகநாதன் ஆகிய இருவரே மேற்படி விசாரணை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாத விசாரணைப் பொலிஸ்பிரிவினரால் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை ஊர்காவற்றுறை பொலிஸாரும், கடற்படையினரும் இணைந்து கைது செய்தனர் என்றும், ஆலயத்திற்குள் இருந்து மீட்கப்பட்டவை விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் என்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

பொலிஸாரின் கோரிக்கைக்கு இணங்க சந்தேக நபர்களைத் தடுத்துவைத்து விசாரிக்க நீதிவான் உத்தரவு வழங்கினார். (சி)

## யாழ். ஆஸ்பத்திரியில் தவறவிட்ட தங்க நகை

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் இருந்து தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

உரியவர்களை ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (1-203)

# சட்டவிரோத இறைச்சி விற்பனை இருவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

அனுமதியின்றி சட்டவிரோதமாக மாட்டிறைச்சி விற்பனை செய்த இருவருக்கு யாழ். நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

யாழ்.மாநகரசபைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நடத்திய திடீர் சோதனையின் போது சட்டவிரோதமாக விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 14 கிலோ மாட்டிறைச்சியைக் கண்டுபிடித்தார்.

இதனைச் சான்றுப் பொருளாக சமர்ப்பித்து உரியவர்கள் மீது சட்ட நட வடிக்கை எடுக்க யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா, தமது குற்றத்தை இருவரும் ஒப்புக்கொண்டதால் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார்.

அந்தப் பணத்தை இருபாலை கானான் சிறுவர் இல்லத்திற்கு வழங்குமாறும் உத்தரவிட்டார். (1-203)

# சமய சந்நிதிகளில்...

நல்லூர்,ஜூன் 27

நல்லூர் முத்து விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 7ஆம் திகதிவரை பத்துத் தினங்கள் நடைபெறும்.

இறுதி நாளான 7ஆம் திகதி சனிக் கிழமை 1008 சங்காபிஷேகம் இடம்பெறும் (203-111)

* * *

சுழிபுரம்,ஜூன்27

சுழிபுரம் - பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய மகா சங்காபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நண்பகல் அன்னதானம் நடைபெறும். பிற்பகல் விநாயகர் வீதியுலா வருதல் நடைபெறும். (203-28)

* * *

சுழிபுரம்,ஜூன் 27

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும். (203-28)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 26

மிருசுவில் வடக்கு கொட்டியம்பதி கோயிற்குளம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து தேர்த்திருவிழா நாளைமறுதினம் வெள்ளி காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா சனி காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. (203-151)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 26

விடத்தற்பளை சம்பாவெளிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா கடந்த 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகியது. எதிர்வரும் 29ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்26

கொடிகாமம் கச்சாய் சம்பேதுருவானர் ஆலய வருடாந்தப் பெருவிழா கொடியேற்றத்துடன் கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை வியாழக்கிழமை மாலை 3.30க்கு நற்கருணை ஆராதனைகளும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலிப் பூசையும் திருச்சொரூப பவனியும் கொடிகாமம் பங்கு அருட்தந்தை பொனிபஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-151)

* * *

யாழ்ப்பாண்ம்,ஜூன்26

காரைநகர் ஆயிலி கொம்பாத்தை ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை அதிகாலை 5.55 மணி தொடக்கம் 7.10 மணிவரை உள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (203-73)

* * *

மடு அன்னை திருவிழா சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத் தலத்தில் எதிர்வரும் இரண்டாம் திகதி நடத்தப்படவுள்ளது.

முன் ஆயத்த வழிபாடுகள் முதல் மூன்று நாள்களும் நடைபெறும் என்று ஆலய பரிபாலகர் அருள்பணி ஞா.அற்புதராஜா தெரிவித்துள்ளார்.

ஆலயத் திருவிழாவை முன்னிட்டு தங்குமிட வசதிகளும் புயண ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 27

வண்ணை வீரமாகாளி அம்பாள் ஆலய வேட்டைத் திருவிழா இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்.பெற்று தொடர்ந்து அம்பாள் வீதியுலா வந்து வேட்டைத் திருவிழா இடம்பெறும்.

இதனையடுத்து அன்னதானம் இடம்பெறும். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றுடைய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம்.



தொடர்பு: ரவி
சோமசுந்தரம் பாடசாலை
22, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
(61623)
T.P.: 0777-903090
0777 246117



## SINGAPORE, MALAYSIA, BELARUS, POLAND, UKRAINE மற்றும் RUSSIA

ஆகிய நாடுகளில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களிலும், பாடசாலைகளிலும் அனுமதி பெற்றுத் தரப்படும்.

மருத்துவம், பொறியியல், கலை, வர்த்தகம், சட்டம், கணனியியல், ஆங்கிலம் எல்லாத்துறைகளிலும் கற்கைநெறிகள்.

பாலர் வகுப்பு முதல் London A/L வரையும் அனுமதி பெற்றுத்தரப்படும். பெற்றோருக்கும் விசா பெற்றுத்தரப்படும்.

- A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள்
- O/L மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்
- வங்கி நிலுவைகள், தூதரக நேர்காணல் தேவையில்லை
- விண்ணப்பித்து 20 நாட்களுக்குள் பல்கலைக்கழகம் செல்லலாம்.
- 100% விசா உத்தரவாதம்
- விடுமுறைகள், Seminar போன்றவற்றுக்கு Swiss, Italy, France, Germany போன்ற நாடுகளுக்கு செல்ல விசேட ஏற்பாடுகள்/ அறிவுரைகள்.
- ரஷ்ய தூதரகத்தினால் (VISA) நிராகரிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்.

Malaysia, Singapore போன்ற நாடுகளில் முதலீடு செய்ய, தொழில் தொடங்க, தொழில் புரிய,குடியேற, வீடு வாங்க உரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

FLEX Graphic

**PARANAN ASSOCIATE PRIVATE LIMITED**
No: 403 1/1, Galle Road, Colombo -06
Tel: 2551641 Hot Line: 0777-370292 Fax: 2551241
E-mail: parananassociatepvtltd@yahoo.com


## இதய அஞ்சலிகள்



நாமெல்லாம் தனி மரியாதை தந்த
எமக்குப் பிடித்த "உபாத்தியாயர்"
அவருக்குப் பிடித்ததோ அபிமானத்துக்கும் மேலாய்
நாவற்குழியின் "மண் வாசனை"
ஆசிரியராய், எழுத்தாளராய்,
இலக்கிய ஆசானாய் உயர்ந்து நின்ற நீர்
எங்களையும் மறந்ததில்லை,
எங்களுடன் வாழ்ந்தீர்,
எங்கள் மனங்களில் என்றென்றும் வாழ்வீர்!

நாவற்குழி சனசமூக நிலையத்தின் மூத்த உறுப்பினரும் ஆலோசகருமான

**பண்டிதர் சு.வேலுப்பிள்ளை (சு.வே)**

அவர்களின் மறைவு எமக்குப் பெரும் துன்பம் தருமொன்று. அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாவற்குழி.
(61938)
நாவற்குழி சனசமூக நிலைய உறுப்பினர்களும், நிர்வாகமும்.

## பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மேகன்ராஜா மனைவி விஜிந்தினி
24, மணிக்கூட்டுக் கோபுர ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
- வழக்காளி

வழ.இல: மணநீக்கம்/632

எதிர்
வரதராசா மேகன்ராஜா
மே/பா: பஞ்சாட்சரம் பாலசரஸ்வதி
Via Voninglomar - 55
90145 - பலர்மோ, இத்தாலி.
- எதிராளி

இவ்வழக்கு 2007ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் ஆஜராக இருக்கவும். இவ்வழக்கு ஒருமுகவிளக்கத்திற்கு திகதியிட்டதற்கு அமைய எடுத்துக்கொள்ளப்பட்டு வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ1 என்ற ஆவணம் எதிராளிக்கு அழைப்புக் கட்டளை சேவிக்க வழக்காளி நடவடிக்கை எடுத்தபோதும், அது சேவிக்கப்பட்டமை தொடர்பில் சுமார் ஒரு வருட காலமாக மன்றுக்கு எந்தவித பதிலோ அறிக்கையோ கிடைக்காத காரணத்தினால் வழக்காளியின் விண்ணப்பத்தின் மீது "வலம்புரி" பத்திரிகையில் எதிராளிக்கு அழைப்புக் கட்டளை விளம்பரப்படுத்தல் மூலம் பதிற்சேவகம் செய்த பின்பும், எதிராளி மன்றுக்கு தோன்றாமையால் 10.05.2007 இல் இவ்வழக்கு ஒருமுகவிளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதையும் வழக்கேட்டில் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவர் எனக்கண்டு,

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2003ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 29ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டுமென்றே வழக்காளியை விட்டுப் பிரிந்து சென்று வன்ம உறவறுப்புச் செய்த குற்றத்துக்காக இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாகும் எனக் கட்டளையிடப்பட்டு, பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

வழக்காளியின் பெற்றோர் வழக்காளிக்கு கொடுத்த சீதனப்பணமாகிய ரூபா மூன்று லட்சத்தையும் எதிராளி வழக்காளிக்கு திருப்பிச் செலுத்தவேண்டும் என்று இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

குறித்த விவாகரத்துத் தீர்வையின் பின் வழக்காளி தன் கன்னிப்பெயராகிய தர்மலிங்கம் மகள் விஜிந்தினி என்ற பெயரைப் பாவித்து வரலாம் எனவும், திருமணமாகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்கலாமெனவும் இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி "உதயன்" தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளி பதிற்சேவகம் செய்து மூன்று மாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை அணைக்காத பட்சத்தில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2007 வைகாசி 17ஆம் திகதி

மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

நீதிமன்றின் கட்டளைப்படி
து.சிறீமோகன்,
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி.

(61949)


## விற்பனைக்கு

இசுசு 150 NHR ரக, LD XX வான் அலுமினிய பொடியுடன் விற்பனைக்கு அல்லது டொல்பின், LH 51 ரக, வான்களுடன் மாற்றம் செய்யவும் முடியும்.
தொடர்பு: 222 2485, 0777 271334
(62253)

## புறொயிலர் உயிர்க்கோழி

புறொயிலர் உயிர் இறைச்சிக்கோழி, கல்பேட் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்).
(61774)
NEW R.S.K FARM
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் (ஐஸ்), புறொயிலர் உயிர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்.
(62256)

## வீடு வாடகைக்கு

தபாற்பெட்டிச் சந்தியில், திருநெல்வேலியில் 5 அறைகள், மூன்று கோல், கராஜ் என்பவற்றுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0779688052
0779253031
(62252)

## மணமகள் தேவை

பிரான்சில் வசிக்கும் 1969ஆம் ஆண்டு பிறந்த, அச்சுவினி நட்சத்திரம், 7இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. பிரான்சில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு:
பொ.அம்பலவாணர்,
186/13, குருநாதர் லேன்,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5060
(61940)


## சாட்டியில் மடுமாதா திருவிழா

எதிர்வரும் ஆடி 2ஆம் திகதி மடு அன்னை திருவிழா சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத் தலத்தில் கொண்டாடப்பட இருக்கிறது.

முன் ஆயத்த வழிபாடுகள் முதல் மூன்று நாள்கள் நடைபெறும். தங்குமிட வசதிகளும் பயண ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரிபாலகர்
அருள்பணி ஞா.அற்புதராஜா.
(61875)

## மரண அறிவித்தல்

### கோபாலசுந்தரம் பரஞ்சோதி (J.P.)

*(ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர் - தொழில் திணைக்களம், கொழும்பு, தர்மகர்த்தா - வல்லைவாழி பிள்ளையார் கோயில்)*

சிவசோதிபவனம், சந்தை வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த கோபாலசுந்தரம் பரஞ்சோதி நேற்று (26.06.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவமணி அவர்களின் அன்புக் கணவரும் அமரர் ஆனந்தகுமார் (யாழ்.போதனா வைத்தியசாலை, சுகாதார முகாமைத்துவ உதவியாளர்), சிவகுமார் (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் நாகநந்தினி, சுமதி (யாழ். சுகாதாரத் திணைக்களம்), அமரர் புஸ்பா, சுபத்திரா (ஜேர்மனி), அமரர் சித்திரா, சத்தியபாமா (HNB நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற திருத்தணிகாசலம், காலஞ்சென்ற பூபாலராஜா மற்றும் கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மோகனப்பிரியா, கீர்த்தனப்பிரியா, பிரியதர்ஷனா, யவனப்பிரியா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மதிசுதன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), சேயோன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் சிவானந்தன் (இளைப்பாறிய சுங்க உத்தியோகத்தர், J.P.), சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.06.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் வல்லை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சிவசோதி பவனம்"
சந்தை வீதி,
உடுப்பிட்டி.
தகவல்:
[illegible] சுமதி.
(சி/52761)

## திருமண வாழ்த்துக்கள்




இன்று (27-06-2007)
புதன்கிழமை வதிரி அம்பாள்
ஆலயத்தில் இருமனம் கலந்து
திருமண பந்தத்தில் இணையும்
**K.ஹேமானந்தன் ஐயா - தேவகி**
தம்பதியினரை பதினாறும்
பெற்று பெருவாழ்வு வாழ
மனமுவந்து
வாழ்த்துகின்றோம்.

சந்நிதி றோட்,
கதிரிப்பாய்,
அச்சுவேலி.

K.மதுசன்,
K.தனுசன்
(மருமக்கள்).

(சி/52757)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
PACKED BY:
ROYAL Industries Colombo 12




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## 5ஆம் ஆண்டு நினைவு

மண்ணில் 25 ★ 03 ★ 1916



விண்ணில் 27 ★ 06 ★ 2002

### திருமதி மரியம்மா பத்திநாதர்

*(இளைப்பாறிய ஆசிரியை, அளவெட்டி)*

இரக்கமுள்ள இறைவா!
எமக்கு நீர் தந்த அம்மா என்னும் கொடைக்காக
உமக்கு நன்றி கூறுகின்றோம்
நீர் வாக்களித்த முடிவில்லா வாழ்வுக்காக
தன்னையும் எங்களையும்
தயார்படுத்தி வாழ்ந்த அவருடைய ஆன்மா
உம் திருமுக ஒளியை
நித்தியத்துக்கும் காண அருள் புரியும்
ஆமென்.

அன்புடன் நினைவு கூரும்:
ஞா.பத்திநாதர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அலுக்கை,
அளவெட்டி. (61941)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 ★ 08 ★ 1923



உதிர்வு 19 - 06 - 2005

### திருமதி துரைசிங்கம் சின்னம்மா

திதி : துவாதசி (27.06.2007)

"வையகத்தில் பிறப்புளதேல் இறப்புமுண்டு" எனினும்
இறந்தும் இறவாது எம்மனத்துள் வாழும்
அன்னைக்கோர் இலக்கணமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
தியாகத்தின் இருப்பிடமாய்
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த
எம் அன்னையின் நினைவலைகள் உள்ளத்தை
உருக்குவதை விலக்க முடியவில்லை
அம்மாவே! உன் ஆன்மா சாந்தி அடைக.

லிங்கதேய,
எழுதுமட்டுவாழ்.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(61937)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை


வினாத்தாள்- 1

ஆக்கம்: கல்விச்சுடர் ஆசிரியர் குழு

நேரம்: 45 நிமிடம்

1ஆம் 2ஆம் வினாக்களில் முதல் தரப்பட்ட உருக்கூட்டத்தினுள் உள்ள உருக்களின் தன்மையை ஒத்த உரு அடுத்து தரப்பட்ட ஐந்து உருக்களில் உள்ளது. அதனைக் கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுக.

01.
02.



3ஆம் 4ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருக்கோலத்திற்கு ஏற்ப -?- குறியிடப்பட்ட இடத்தில் வரவேண்டிய உருவினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

03.
04.



5ஆம் 6ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட கடதாசி அட்டையை மடித்து பெறமுடியாத திண்ம உருவினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

05.
06.



பின்வரும் வினாக்களில் உள்ள கோலத்தை அவதானித்து அடுத்துவரவேண்டிய சரியான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிந்து கீறிடுக.

07. B 7 M க 2, M க 2 B 7, 2 B 7 M க, ..................
( B 2 M க 7, 7 M க 2 B, க M 7 B 2 )

08. 4Φ☐YT, Φ☐YT4, ☐YT4Φ, ..................
( YT4Φ☐, TY☐Φ4, 4Φ☐YT )

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

09. மின்சாரத்தைப் பயன்படுத்துவதால் எமது வேலைகள் இலகுவாகும். எனினும் அதனால் ஆபத்துக்களும் அதிகம். இதன்படி நாம் எடுக்கக்கூடிய முடிவு யாதெனில்,
1) ஆபத்து ஏற்பட்டாலும் நாம் மின்சாரத்தைப் பாவித்தே ஆகவேண்டும்.
2) ஆபத்து ஏற்படுவதால் நாம் மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடாது.
3) ஆபத்துக்களில் இருந்து தப்பிக்கொள்வதற்காக நாம் மின்சாரத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

10. ஆதவன் தரம் 5இல் கல்வி கற்கிறான். கடந்த ஒரு மாதமாக அவன் பாடசாலைக்கு வரவில்லை. அவன் பாடசாலைக்கு வராதிருப்பதற்கான மிகப்பொருத்தமான காரணமாக இருப்பது,
1) ஆதவனிடம் பணவசதி அதிகமாக இருத்தல்.
2) ஆதவன் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருப்பான்.
3) ஆதவன் தனியார் வகுப்புகளுக்குப் போகிறான்.


சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

11. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சண்முகேசன் கோவிலுக்குப் போவான். சண்முகேசன் நேற்றுமுன்தினம் கோயிலுக்குப் போயிருந்தால் நாளை மறுநாள் என்ன கிழமை?
1) திங்கள் 2) ஞாயிறு 3) சனி 4) செவ்வாய்

12. ஒரு பூந்தோட்டத்தில் முதலில் ஒரு ரோசாச் செடியும் அடுத்து ஒரு மல்லிகைச் செடியும் அதற்கடுத்து ஒரு சூரியகாந்திச் செடியும் மாறிமாறி நடப்படுகின்றன. அந்த வரிசையில் 25 ஆவது செடி யாது?
1) மல்லிகை 2) ரோசாச் செடி 3) சூரியகாந்தி 4) சொல்லமுடியாது

13ஆம் 14ஆம் வினாக்களிலுள்ள எண்கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய எண்களை எழுதுக.

13.
14.



சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

15. கமலின் இன்றைய தினத்திற்குரிய வயது 26 வருடங்களாகும். நிமலின் இன்றைய தினத்திற்குரிய வயது 6 வருடங்களாகும். கமலின் வயது நிமலின் வயதைப் போல மூன்று மடங்காவது இன்றிலிருந்து எத்தனை வருடங்கள் சென்ற பின்னராகும்.
1) 5 2) 4 3) 7 4) 3

16. குமரன் மாலைநேரம் கடற்கரையால் நடந்து செல்லும் போது நிழலானது அவனுக்கு வலது கைப்பக்கத்தில் விழுந்தது எனின் குமார் நடந்து சென்ற திசை யாது?
1) வடக்கு 2) கிழக்கு 3) தெற்கு 4) மேற்கு

17.



A B C D E F

மேலே பற்சக்கரங்கள் ஒன்றினுள் ஒன்று தொடர்புடையதாகச் சுற்றும். இவற்றில் சக்கரம் D வலஞ்சுழியாக சுற்றும் போது அதே திசையில் சுற்றும் ஏனைய சக்கரங்கள் எவை?
1) A,F 2) B,F 3) C,F 4) C,A

18ஆம் 19ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்கு (?) பொருத்தமான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

18.
19.



பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஏழு சொற்கள் தரப்பட்டுள்ளன. இந்த ஏழு சொற்களையும் கருத்துள்ள விதத்தில் ஒழுங்குபடுத்தலாம். அவற்றை அவ்வாறு ஒழுங்குபடுத்தும் போது மூன்றாம் நான்காம் ஐந்தாம் இடங்களில் வரும் சொற்களை முறையே காட்டும் எழுத்துக்களைக் கொண்ட விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

| | | | |
|---|---|---|---|
| 20. A-நாள் | B-மாதம் | C-வாரம் | D-நிமிடம் |
| E-செக்கன் | F-ஆண்டு | G-மணித்தியாலம் | |
| 1) GAC | 2) CAG | 3) AGD | 4) GDA |
| 21. A-மாகாணம் | B-கோட்டம் | C-உலகம் | D-கிராமம் |
| E-மாவட்டம் | F-நாடு | G-கண்டம் | |
| 1) GFA | 2) FAE | 3) AEB | 4) EAF |

A,B,C,D ஆகியவர்களின் உயரங்கள் தரப்பட்டுள்ளன. அதனை வாசித்து விளங்கி அதன் கீழுள்ள வினாக்களுக்கான சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

A என்பவன் B ஐ விட உயரமானவன்
B யும் C யும் ஒரே உயரத்தை உடையவர்கள்
D என்பவன் C ஐ விட குள்ளமானவன்

22. கீழே தரப்பட்ட கூற்றுக்களுள் சரியான கூற்று எது?
1) B யும் D யும் ஒரே உயரத்தை உடையவர்கள்
2) A என்பவர் எல்லோரையும் விட உயரமானவர்
3) D யும் C யும் உயரத்தில் சமனானவர்கள்

23. பின்வருவனவற்றுள் பிழையான கூற்று
1) A என்பவர் எல்லோரிலும் உயரமானவர்
2) A யும் D யும் உயரத்தில் சமனானவர்கள்
3) B யும் C யும் உயரத்தில் சமனானவர்கள்

பின்வரும் ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான விடையைக் கீழே உள்ளவற்றிலிருந்து தெரிந்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.


24. நாம் ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும். ஏனெனில்,
1) கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பாகையால்
2) வெளிநாட்டவர் கல்வியால் முன்னேற்றமடைந்திருப்பதால்
3) கற்றவர் சந்தோஷமாயிருத்தலால்
4) கல்வி அறிவைத் தருவதால் (..........)

25. நாம் ஒவ்வொருவரும் சுத்தமாக இருக்கவேண்டும். ஏனெனில்,
1) மற்றவர்கள் மதிப்பார்கள்
2) சுத்தமாக இருப்பது நல்லதெனப் பலர் கூறுவதால்
3) சுத்தம் சுகம் தரும்
4) சுத்தமாக இருப்பதால் அறிவு வளரும் (..........)

இங்கே மூன்று சொற்கள் தரப்பட்டுள்ளன.
சகதி, சுதிரை, வசதி
இம்மூன்று சொற்களினதும் ஆங்கில எழுத்துக்களில் அமைந்த குறியீட்டுச் சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறியீட்டுச் சொல்லுக்கும் எதிரேயுள்ள அடைப்பிற்குள் சரியான தமிழ்ச்சொல்லை எழுதுக.

26. NXZ (..............) 27. KYZ (..............) 28. YZV (..............)

இவ்வுருவில் தாயக்கட்டை ஒன்று மேசையின் மேல் காட்டப்பட்டுள்ளது. தாயக்கட்டையின் எந்த எதிர்முகங்கள் இரண்டினதும் கூட்டுத்தொகை 7ஆக அமையும். இப்பொழுது மேற்பக்கத்தில் உள்ள இலக்கம் 6ஆகும். அதன்படி,



29. தாயக்கட்டையை ஒருமுறை தெற்குத்திசைக்குப் புரட்டினால் மேற்பக்கமாக இருக்கும் எண்
1) 2 2) 5 3) 4 4) 6

30. தாயக்கட்டையை இருமுறைகள் கிழக்குத்திசைக்குப் புரட்டினால் மேற்பக்கம் இருக்கும் எண்
1) 1 2) 3 3) 5 4) 2

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

31. ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்கு முறையில் ஒவ்வொரு உறுப்பினரின் வீட்டில் கூடுவர். திரு குணசேகரன் வீட்டில் சென்ற மார்ச் மாதம் கூட்டம் நடைபெற்றது. திரு குணசேகரன் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெற வேண்டும்?
1) ஜனவரி 2) பெப்ரவரி 3) நவம்பர்

32. இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது எனது தம்பியின் வயதைவிட இரு மடங்காக இருக்கும்?
1) 3 வருடங்கள் 2) 4 வருடங்கள் 3) 8 வருடங்கள்

33. மிருகக்காட்சிசாலையில் ஒவ்வொரு மூன்றாம் கிழமையும் யானைகளின் விளையாட்டு நிகழ்ச்சி இடம்பெறும். நேற்றைக்கு முதல்நாள் புதன்கிழமை எனின் அடுத்த யானைகளின் விளையாட்டு இடம்பெறுவது எப்போது?
1) இன்று 2) நாளை 3) நாளை மறுநாள்

34. ஒரு கடிகாரமானி ஒவ்வொரு அரைமணித்தியாலங்களின் பின்னும் ஒலிக்கும். அது மூன்றாவது முறையாக 9.15 மணிக்கு ஒலித்தது எனின், 8ஆவது முறையாக ஒலிக்கும் போது எத்தனைமணியாக இருக்கும்?
1) 11.45 2) 12.15 3) 12.45 4) 1.15

கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

35. பின்வரும் கூற்றுக்களுள் எது ஆசிரியர் ஒருவரால் கூறப்பட்ட கூற்றாகும்?
1) நாளை பாடசாலைக்கு வரமாட்டேன் என்று ஆசிரியரிடம் கூறு
2) இப்போது நான் கற்பிப்பதைக் கவனமாகக் கேளுங்கள்
3) நான் பயிற்சிக் கொப்பியில் எல்லாக் கணக்குகளையும் எழுதிச் செய்துவிட்டேன் (..........)

36. "அடுத்த போட்டியில் எங்கள் அணி நிச்சயம் வெற்றிபெறவேண்டும் தலைமை விட்டு வெளியேறும்" இக்கூற்று யாரால் கூறப்பட்டிருக்கலாம்?
1) ஒரு மாணவனால் 2) போட்டி நடுவரால்
3) ஒரு விளையாட்டுக் குழுவினரால் (..........)


கீழேயுள்ள உருவப்படத்தின்படி வினவப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தந்துள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.



37. இங்கு ஆகக்கூடிய முறை இடம்பெற்ற ஆங்கில எழுத்தும் இலக்கமும்
1) P, 6 2) H, 6 3) V, 3 4) S, 2

38. ஒரு இலக்கத்தின் இரண்டு பக்கமும் ஒரே ஆங்கில எழுத்து பயன்பட்டுள்ள அந்த இலக்கம்
1) 5 2) 6 3) 2 4) 3

அருகே வரைபடத்தில் மாணவர்கள் விரும்பி உண்ணும் பழங்களின் அடிப்படையில் மாம்பழம் விரும்பி உண்பவரை வட்டத்திலும், பலாப்பழத்தை விரும்பி உண்பவர்களை முக்கோணத்திலும், அன்னாசிப்பழம் விரும்புபவரை சதுரத்திலும் காட்டப்பட்டுள்ளது.



39. மாம்பழமும் அன்னாசிப்பழமும் விரும்பிச் சாப்பிடும் இருவர் யார்?
1) சிவம், பாமா 2) சுபா, ராஜா 3) காந்தன், கமல்

40. மாம்பழத்தையும் பலாப்பழத்தையும் விரும்பிச் சாப்பிடுபவர் யார்?
1) லதா 2) காந்தன் 3) சுபா

(முற்றும்)

### கடந்த 20.06.2007 வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 01) வயற்காட்சி
02) களை எடுத்தனர்
03) கடல்போல / பச்சைக்கம்பளத்தில் பதித்த நீல மணிகள்
04) கழனி/புலம்
05) குனிந்து
06) உயர்ந்த
07) கூத்தாடின/பறந்தன காட்சியளித்தன/இருந்தன ஊஞ்சலாடிக்கொண்டிருந்தன.
08) கூட்டங்கூட்டமாக
09) நெற்பயிர்கள்
10) குபுகுபு
11) அழகுமிக்க/அழகு நிறைந்த வடிவுமிக்க/ அழகுமிகுந்த
12) சிறிய குளங்கள்/சிறிய குளங்களில் இருந்த நீர்

02. 1) கப்பல் கடலில் பயணம் செய்யும்.
2) மயில் அழகாக நடனம் ஆடும்.
3) மல்லிகை மாலையில் மணம் வீசும்.
4) பூனை அழகாக நடனம் ஆடும்.
5) கப்பல் மாலையில் பயணம் செய்யும்.

03. 1) அண்ணா! அண்ணா! மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?
2) மா, பலா, வாழை என்பன முக்கனிகளாகும்.

04. 1) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.
2) மறு பக்கம் பார்க்க.

05. 1) அன்னாசிப்பழத் துண்டுகள்
2) சரணாலயம்

06. 1) Please excuse me.
2) Happy birthday.
3) Where do you live?

07. 1) படகு/தோணி/வள்ளம்
2) பாதங்கள்
3) கடை
4) வியாழக் கிழமை/ வியாழன்

08. 1) கிளி பச்சை நிறம்.
2) இது எனது பென்சில்.
3) இவர் எனது பாட்டன்/இவர் எனது தாத்தா.
4) சின்னத் தம்பி.

09. 1) பருந்து
2) தேன்குருவி
3) மீன்கொத்தி
4) கிளி
5) மரங்கொத்தி

10. 1) 3
2) 3
3) 2
4) 1
5) 2
6) 2
7) 2
8) 3
9) 4
10) 3

11. 1) ஒலிக்கச் செய்தல்
2) முன்நோக்கிச் சுற்றல்
3) பதிவு செய்தல்
4) சிறிது நேரம் நிறுத்தல்

12. 1) முகமூடி
2) காகிதக் கூழ் மரப்பலகை/மரம்
3) அலுமாரி/புத்தக இறாக்கை தட்டு

13. 1) A-புலிநகம்-விலங்கு பிராணி
2) B-முருங்கை-வெடித்து/காற்றால்

14. 1. 1) A-852
2) B-475
3) C-512
2. 1) A-327
2) B-131
3) C-417

15. 1) 1 km
2) 400
3) 5l 500ml
4) 33m 00cm
5) 22 ருபா 50 சதம்

16. 1) 61
2) 435 ருபா
3) 185 ருபா
4) ஊதி
5) 340 ருபா

17. பொருத்தமான ஆறு வசனங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டில் மணிவிழாக் காணும் பலாலி ஆசிரிய கலாசாலை; விசேட துறைகளுடன் தனித்துவம் கொண்டு விளங்கிய கல்விக் கூடம்

*யாழ்ப்பாணக் குடாநாட்டினது கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய பலாலி ஆசிரிய கலாசாலையின் மணிவிழா ஆண்டு இது.*

*பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்கி அவர்கள் ஊடாக பல சந்ததிகளைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக்கு உரமூட்டிய பெருமைக்குரியது இக்கலாசாலை.*

*குடாநாட்டின் கல்வித் தாய்களில் ஒன்றாக விளங்கிய இக்கலாசாலை, மக்களைப்போலவே இடம் பெயர்ந்து, வெவ்வேறு ஊர்களில் தங்க நேர்ந்த போதிலும் அதன்பணி தோல்வியில்லாமல் தொடர்கிறது. கலாசாலையின் மணிவிழா இன்று கொண்டாடப்படுகிறது அதனையொட்டிய மீள் பார்வையின் முதலாம் பகுதி இது.*

'இலங்கையின் தேசிய கல்வி விருத்தியானது உதாசீனம் செய்யப்படுகின்றது' என சேர். பொன் அருணாசலம் (1901) தனது குடிசன மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இக்கருத்தானது இலங்கையிலும் பிரித்தானியாவிலும் இலங்கையின் சுதேச கல்வி தொடர்பாக ஆராயத் தூண்டியது. இதனால் இலங்கையின் கல்விச்சேவைகள் சீர்படுத்தப்பட்டன. சமய சார்பற்ற நடுவுநிலைமைக கொள்கை ஒன்று வகுக்கப்பட்டது. சுயமொழி மூலமான கல்விக்கு ஆதரவு தருவதென்ற பிரித்தானிய அரசின் முடிவுக்கு இணங்க சுயமொழிப் பாடசாலைகள் பெருந்தொகையாக நிறுவப்பட்டன. இதற்காக பெருந்தொகை ஆசிரியர்கள் நாடுமுழுவதும் தேவைப்பட்டனர்.

1916ஆம் ஆண்டு கோப்பாய் தேவாலய வளவில் 'ஐக்கிய பயிற்சிக் கல்லூரி' நிறுவப்பட்டது. தேவைப்பட்ட சைவ ஆசிரியர்களின் தொகையை ஈடுசெய்ய இப்பயிற்சிக் கல்லூரியில் இருந்து வெளிவரும் ஆசிரிய மாணவர் தொகை போதாது எனக் கருதிய அரசு புதிய இடத்தில் ஒரு (சைவ ஆசிரியர்களை) உருவாக்க ஆசிரியர் கல்லூரியை அமைக்க முன்வந்தது.

இதற்குத் தேவையான நிலத்தை சேர் பொன். இராமநாதன் அன்பளிப்பாக வழங்க முன்வந்தார். (கோப்பாயில் தன் 25 ஏக்கர் நிலத்தில் 5 ஏக்கரை) எனவே 'யாழ்ப்பாணம் ஆசிரியர் கலாசாலை' கோப்பாயில். வித்தியாதிபதி எஸ் மக்ரே என்பவரால் மல்லாகத்தை சேர்ந்த உயர்திரு.அ.பொன்னையாவை அதிபராகக் கொண்டு 02.10.1923 (வெள்ளிக்கிழமை) முதல் இயங்கத் தொடங்கியது. 12 ஆண்டு காலம் இக்கலாசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த அதிபர் திரு.அ.பொன்னையா அவர்கள் 1935ல் ஓய்வுபெற்றதை தொடர்ந்து திரு.எஸ். கே.இராசலிங்கம் சிறிது காலம் அதிபராகப் பொறுப்பேற்று 1936வரை கல்லூரியை நிர்வகித்தார்.

அவரைத் தொடர்ந்து கொழும்பு றோயல் கல்லூரியில் பணியாற்றிய உயர் திரு.ஏ.ஆர்.சண்முகசுந்தரம் யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்றார். பல்வேறு துறைகளில் பெரும் மதிப்புப் பெற்று விளங்கியது மேற்குறிப்பிட்ட இக்கல்லூரியில் இக்காலத்தில் ஆண்கள் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டனர்.

கலாநிதி C.W.W. கன்னங்கரா கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றதும் கல்வியிலும், கல்வி நிருவாகத்திலும் பல மாறுதல்கள் புகுந்தன. கல்விக் கொள்கைகள் புனருத்தாரணம் செய்யப்பட்டன. கற்போர் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்தது. நாடு பூராவும் பெண்களும் ஆசிரியர் பணிகளுக்காக கணிசமாக அளவு சேர்க்கப்பட்டனர். இதனால் 1946ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலைக்கு பக்கத்தில் ஒரு வீட்டில் பெண் ஆசிரியர் கல்லூரி தொடங்கப்பட்டது. இதன் அதிபராக

## ஒரு மீள்பார்வை

ஸ்ரான்லிக்கல்லூரி அதிபராக இருந்த செல்வி ஞானம் முருகேசு பணியாற்றியுள்ளார்.

தொகையின்றி ஆசிரியசேவையில் சேர்க்கப்பட்ட பெண்களுக்கான பயிற்சியை வழங்குவதற்காக கோப்பாயில் இயங்கிய "யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி"யை தனியே பெண்களுக்கு உரியதாக்குவதென தீர்மானிக்கப்பட்டது.

### 1947 இல் உதயமானது

இதன் காரணமாக அக்காலத்தில் கோப்பாயில் இயங்கிய "யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி" அதிபராக இருந்த திரு.சண்முகசுந்தரம் ஆண்களுக்கென பலாலியில் (முன்னர் பிரித்தானிய ஆட்சியாளரின் இராணுவமுகாம் இருந்த கட்டடத்தின் ஒரு பகுதியை) (16.05.1947இல்) ஆண் ஆசிரியர்களை பயிற்றும் ஒரு கல்லூரியை ஆரம்பித்தார். ஆணகளுக்கென ஒரு ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியை அமைக்க வேண்டும் என்ற அதிபரின் அவா கல்லூரிக்கு ஒரு வலுவான அடித்தளத்தை இட்டுக் கொடுத்தது. இந்நிலையில் திருநெல்வேலியில் ஒரு வீட்டில் இதுவரை இயங்கிய பெண்கள் ஆசிரியர் கல்லூரி கோப்பாய்க்கு மாற்றப்பட்டு செல்வி ஞானம் முருகேசு அதிபரானார்.

சேவையில் இருக்கும் போதே திரு.சண்முகசுந்தரம் இயற்கை எய்தியதால் இவரின் பதவிக்கு திரு.கே.முத்துவேற்பிள்ளை நியமிக்கப்பட்டார் இதன பின்னர் 1951இல் திரு.முத்துவேற்பிள்ளை மானிப்பாய் இந்துக்கல்லூரியின் உபஅதிபர் பதவியை ஏற்று பலாலி ஆசிரியர் கல்லூரியை விட்டுவிலகவே (31.06.1950) இல் திரு.பி.சவிரிமுத்து அதிபரானார். 1954 காலப்பகுதியில் இவர் யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்துக்கும், அங்கிருந்து மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலைக்கும் மாற்றலாகிச்செல்ல 01.06.1954இல் திரு.எஸ்.கந்தசாமி அதிபரானார்.

இக்காலப்பகுதியில் செய்முறைப்பயிற்சிக்கு தேசிய பயிற்சிக் கல்லூரிகளைத் தாபிக்க வேண்டும் என்ற பிரேரணை சட்டசபையில் பிரேரிக்கப்பட்டதுடன் பலாலி, மிரிகம ஆகிய இரு அரசினர் ஆசிரியர் கல்லூரிகளையும் இத்தகைய ஆசிரியர் கலாசாலைகளாக மாற்றுவது என்ற தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்காக 54 ஏக்கர் காணியும் பலாலியில் ஒதுக்கப்பட்டது.

### விசேட துறைகள் ஆரம்பம்

1957இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையானது விசேட ஆசிரியர் கலாசாலையாக்கப்பட்டு அதன் தரம் மகரகம ஆசிரியர் கலாசாலையின் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. 'கலையொடு பண்பாடமைவுறப் பெறுக' என்பது கலாசாலையின் மகுடவாசகமானது. ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான விசேட செயன்முறைப் பாடங்களுடனான பயிற்சி (தமிழ்மொழி மூலம்) இங்கு ஆரம்பிக்கப்பட்டது.

1969இல் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை வளவில் "இராமநாதன் கனிஷ்ட பல்கலைக் கழகம்" நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்துக்கு அதிபராக கந்தசாமி நியமனம் பெறவே கலாசாலையின் பொறுப்பு திரு.ஜி.என்.எட்வேட்டிடம் (1969.09)ஒப்படைக்கப்பட்டது.

கனிஷ்ட பல்கலைக்கழகம் 01.06.1971 இல் மூடப்பட்டது. உடைமைகள் அனைத்தும் பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலையோடு சேர்க்கப்பட்டன. இதன் காரணமாக பலாலி ஆசிரியர் கலாசாலையில் வளங்கள் மிகுந்து காணப்பட்டன. பண்ணை, வணக்கத் தலங்கள், மைதானம், பெரிய கட்டடத்தொகுதிகள், திரை அரங்கு சொந்த வாகனம் என்பனவும் இதில் அடங்கும் 27.09.1972 இல் திரு.எட்வேட் ஓய்வுபெறவே திரு.எஸ்.மகேசு பலாலியின் புதிய அதிபரானார். இவரின் காலத்தில் இசை,நடனம்,சித்திரம், உடற்கல்வி ஆகிய துறைகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஸ்தாபகர் திரு.ஆர்.ஈ.சண்முகசுந்தரம் போலவே 29.09.1974இல் இவரும் சேவையில் இருக்கும் போதே இயற்கையெய்தினார். இதனால் அதிபர் பதவியை திரு.வி.கந்தசாமி ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இவரின் காலத்தில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 800ற்கும் மேலென்று கூறப்படுகின்றது. இக்காலத்தில் 'கத்தோலிக்கமாதா கோயில்' ஒன்றும் கலாசாலை வளவில் கட்டப்பட்டது. 29.03.1979 இல் திரு.வி.கந்தசாமி ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனத்தின் கல்வி ஆலோசகராக நியமனம் பெற்று பூட்டான் நாட்டிற்கு மாற்றலாகிச் சென்றார்.

திரு.ஈ.கனகலிங்கம் 29.03.1979முதல் அதிபரானார். இக்காலத்திலே பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வளவில் இன்றும் கம்பீரமாகக் காணப்படும் (1981) விநாயகர் ஆலயம் நிறுவப்பட்டது. 31.03.1985ல் திரு.கனகலிங்கம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திரு.பி.பரமேஸ்வரன் அதிபராகியதுடன் கலாசாலையை மிகவும் இக்கட்டான காலப்பகுதியில் நிர்வகிக்க வேண்டியவரானார்.

**ஜோண் குயின்ரஸ் M.A.**
விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை.

### தனித்துவத்துடன் விளங்கியது

அக்காலத்தில் இருந்தே தமிழ்மொழி மூலம் ஆசிரிய பயிற்சி வழங்கும் கலாசாலைகளுள் பலாலி ஆசிரியர் கலாசாலை மிகவும் சிறப்பானதாகவும் தனித்துவம் மிக்கதாகவும் அனைவராலும் மதிக்கப்பட்டு வளர்ந்து வந்துள்ளது என்பதற்கு 1980களில் ஆசிரிய கல்வி நிர்வாகக்கிளையின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் நாயகம் திரு.பளிஹக்கார சம்வத்திரட்டில் கூறிய கூற்று சான்றாதாரமாக்வுள்ளது.

"Palaly Teachers' College is the largest Tamil Teachers' College and one of the biggest in the Country. It must be Congratulated for all – round activities that it provides for the development if the Knowledge, Skills, attitudes and the personality of the teachers who undergo training there" என்றார். ★

## 31ஆம் நாள் நினைவலைகள்



### அமரர் நல்லையா பரமலிங்கம்

மண்ணில் 03.03.1955 — விண்ணில் 28.05.2007

அன்புள்ளம் கொண்டு அனைவரோடும் பழகி
ஆர்வமுடன் எமக்கு ஆதரவு தந்து
இன்பமுடன் இங்கே இணைந்து வாழ்ந்து
ஈகையிலே சிறந்து ஈடிணையற்றவராய்
உறவுக்கே மகனை உளத்தால் நிறைவுற்று
ஊரில் சீருடனே ஊற்றாகத் திகழ்ந்து
எல்லோர் மனதிலும் ஏற்றம் கொண்டு
ஏங்க வைத்தே எமை விட்டுப் பிரிந்து
ஒருத்தியாகவே ஒயிலாளை தவிக்கவிட்டு
ஓலமிட வைத்து இறைவனிடம் போனவரே
ஓயாது கவலைகள் ஒழியாது கண்ணீர்கள்.

இன்று (27.06.2007) புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.* (61939)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
**மனைவி, மகன்.**

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி கனகமணி குலேந்திரன்

மலர்வு 19-03-1939 — உதிர்வு 29-05-2007

29.05.2007 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், எல்லாவழிகளிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (27.06.2007) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தினையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆராய்ச்சிமா,*
*மல்லாகம்.* (61908)

**-குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் தில்லையம்பலம் மகேந்திரராஜா

*(உப தலைவர், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி)*

அமரர் தில்லையம்பலம் மகேந்திராஜா அவர்கள் மாபெரும் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களது காலத்திலேயே தமிழ் காங்கிரஸில் இணைந்து மிகவும் தீவிரமாக அரசியல் வேலைகளை முன்னெடுத்து பின்னர் மாமனிதர் குமார்பொன்னம்பலம் அவர்களது காலத்தில் அவருக்குப் பக்கபலமாக நின்று இளைஞர் காங்கிரஸை உருவாக்கி அதன் இணைச் செயலாளராக இருந்து கட்சியின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய ஓர் உத்தமர். பின்னர் 2001ஆம் ஆண்டில் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கும் காலத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தன்னால் முடிந்த சேவைகளை வழங்கினார்.

இறக்கும் போது கட்சியின் உபதலைவர் பதவியில் இருந்து தனது கட்சிப்பற்றையும் தமிழ்த்தேசிய உணர்வையும் வெளிப்படுத்தினார். சிறந்த மேடைப் பேச்சாளராகிய மகேந்திரராஜாவின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்குகொண்டு அஞ்சலிக்கின்றோம்.

(61942)

**அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்.**

## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய



### வேட்டைத் திருவிழா விஞ்ஞாபனம்

இன்று 27.06.2007 புதன் காலை 9 மணி

தார்மேவு மார்பன் சங்கரன் உடலில்
செம்பாதி தரித்த தாயே வேட்டையாடி அருள்வாய்
பார் மேவு இமயப் பனி மேவு மலையில்
பாங்காய் வளர்ந்த தாயே வேட்டையாடி அருள்வாய்
நீர் மேவு நெடுங் கடலில் நீள் துயில் கொண்ட
நெடுமால் உடன் பிறந்த பின்னோய் வேட்டையாடி அருள்வாய்
சீர் மேவு தல மகள் ஆறில் நின்றருளும்
செல்வக் குமரன் அன்னோய் வேட்டையாடி அருள்வாய்
பங்கயத்தாள் நோக பகலிரவாய் நின்று
பரவுவோர்க்கு நல்லருள் புரியும் வீரமாகாளியே
எங்களின் பாவங்கள் இல்லாமல் போக
எழுந்தருளி வேட்டையாடி அருள்வாய் வீரமாகாளியே
குதிரை மீதமர்ந்து தெருவலம் நீ வந்து
தீமைகள் அனைத்தையும் கொய்வாய் வீரமாகாளியே
சங்குடன் சூலமும் வாளுடன் வில்லு மேந்தி
சஞ்சலம் தீர்த்திட வேட்டையாடி அருள்வாய் வீரமாகாளியே

***கவியாக்கம்:*** மகாகவி சாகரம், மதுரகவி காரை. **எம்.பி.அருளானந்தன்** J.P.
*(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி.)*

★ **வேட்டைத்திருவிழா நிகழ்வில் விசேட மேளக்கச்சேரி**

1] கோண்டாவில் V.K.கானமூர்த்தி [கலாபூஷணம்] அவரது புதல்வன் கிருஷ்ணதாசன் குழுவினர்
2] இணுவில் N.R.கோவிந்தசாமியின் புதல்வர்கள் [ஈஸ்வர ஞான சாயித்திய இசை அரசு]

**இன்று (27.06.2007) புதன் காலை 9 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று அம்பாள் விசேட அலங்காரத்துடன் வீதி உலாவந்து வேட்டைத் திருவிழா நடைபெற்று அதனைத் தொடர்ந்து மகா பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும் என்பதனை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.**

குறிப்பு: திருவிழா நிறைவு பெற்றதும் நண்பகல் 12 மணியளவில் அன்னதானம் வழங்கப்படும்.

**- வேட்டைத்திருவிழா உபயகாரர்**

**ஆசிச்செய்திகள்**

*அண்ட சராச்சரங்களை எல்லாம் அருளாட்சி புரிகின்ற அன்னை வீரமாகாளித் தாயே! வேட்டை யாடி மக்களின் வினை தீர்க்க வாருமம்மா. மகிடாசுரனை வதம் செய்த வீரமாகாளியே! நம்நாட்டு மக்களின் இன்னல்களை எல்லாம் வேட்டையாடிடும் அம்மா. உன் அடியார்களுக்கெல்லாம் உன் அருளாசி கிடைக்க அருளாசி கூறுகின்றேன். அம்பாளின் முடிவுறாத் திருப்பணிக்கு அடியார்களை வாரி வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.*

சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ்குருக்கள்,
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்,
பிரதமகுருவும், ஆதீனகர்த்தாவும்.

*வேட்டைத் திருவிழாவில் அடியார்கள் யாவரும் பக்தியுடன் பங்குபற்றி வீரமாகாளி அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக!*

"நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம்
பெறலாம்"

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

சிவஸ்ரீ சி.செல்வராசக் குருக்கள்,
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்,
மகோற்சவ பிரதமகுருவும்,
ஆதீனகர்த்தாவும். (61905)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நடுநிலையாகச் செயற்பட சர்வதேசம் முன்வரவேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஊடகப் பேட்டி ஒன்றின் மூலம் குறிப்பிட்டிருக்கும் கருத்துகள் ஒட்டு மொத்த தமிழினத்தின் மனநிலையை அப்படியே பிரதிபலிப்பனவாக அமைந்திருக்கின்றன.

தங்களுடைய கௌரவமான வாழ்வுக்காகவும், நியாயமான உரிமைகளுக்காகவும், அடக்கு முறைக்கு எதிராகவும் சுமார் முப்பது ஆண்டு காலம் அமைதி வழியில் - அஹிம்சை முறையில் - போராட்டம் நடத்தியவர்கள் ஈழத்தமிழர்கள். அப்போதெல்லாம் அவர்களின் நியாயமான கோரிக்கைகள் சிங்கள ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டன; உதாசீனம் செய்யப்பட்டன. ஆயுதமுனையில் அவர்கள் அடக்கப்பட்டனர். ஒடுக்கு முறை தொடர்ந்தது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சிங்களத் தலைமைகளிடம் தெளிவான பார்வையோ, தீர்க்க தரிசனமான நன்நோக்கோ, உருப்படியான தீர்வு உபாயங்களோ இருக்கவில்லை. இனப்பிரச்சினையை திறந்த மனத்துடன் - மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் - நியாயமான போக்கில் - அணுகும் சிந்தனைத் தெளிவும் அவற்றிடம் இருக்கவில்லை.

சிங்கள மேலாதிக்க வாதிகளின் பிடியில் சிறுபான்மையினரான தமிழர்களின் பேரவலம் தொடர்ந்ததால் தம்மையும், தமது இனத்தையும், அதன் தனித்துவ அடையாளங்களையும், தமது தாயகத்தையும், அதில் தமது வாழ்வுரிமையையும் காப்பதற்காகத் தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

தாமாக விரும்பித் தமிழர்கள் யுத்த வழியை நாடவில்லை. அவர்கள் போரின் மீது தீராத பற்றுக் கொண்ட போர் வெறியர்களும் அல்லர். ஆயுதம் தூக்கும் நிலைக்கு - தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற கட்டாயத்துக்கு - பௌத்த, சிங்கள மேலாதிக்க ஆட்சியே தமிழர்களை வல்வந்தமாகத் தள்ளியது.

சுருங்கக் கூறுவதானால் சிங்கள அடக்குமுறை மேலாதிக்கமே தமிழர்களை ஆயுதம் ஏந்த நிர்ப்பந்தித்துப் போர் வழிக்கு அவர்களை நெட்டித் தள்ளியது.

ஆனாலும் -

பேரழிவுகளையும், போரழிவுகளையும் சந்தித்து, இவ்வளவு மனிதாபிமானப் பேரவலங்களை எதிர்கொண்ட பின்னரும், தமது தேசியப் பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - நியாயத் தீர்வு காணும் எத்தனங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட தமிழர் தரப்புத் தயாராகவே இப்போதும் காத்திருக்கின்றது.

ஆனால் சிங்கள ஆளும் வர்க்கம் தனது அதிகாரப் போட்டிகளுக்காக அந்த அமைதி வாய்ப்புகளைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியதோடு அல்லாமல், தென்னிலங்கை பௌத்த - சிங்களத் தீவிரப் போக்கு சக்திகளைத் திருப்திப்படுத்தி, அவற்றின் ஆதரவைத் தக்கவைத்துக்கொள்ளும் தனது அரசியல் நோக்குக்காக, போர்த் தீவிரத்தில் முனைப்பாக நிற்கின்றது.

இலங்கைத் தீவு பெரும் போர் வெடிக்கும் பேராபத்தின் விளிம்பை நெருங்கியிருப்பதற்கு இதுதான் பின்னணி.

தமிழர்களுக்கு எதிரான இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை, மோசமான மனித உரிமை மீறல்கள், பெரும் யுத்தத்துக்கான போர் முனைப்பு என இலங்கை அரசின் கொடூரப் போக்குத் தொடர்கின்றது. ஆனால் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் இணைத் தலைமைகள் உள்ளிட்ட சர்வதேச சமூகம் செய்யாமல் வாளாவிருக்கின்றது.

ஈழத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புலிகள் மற்றும் இலங்கை அரசு ஆகிய இரு தரப்பினருமே பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும், இராணுவத் தீர்வு முயற்சியால் பலன் கிட்டாது என்றெல்லாம் உலகம் உறுதியாகக் கூறுகின்றமை வாஸ்தவம்தான்.

ஆனால் இவ்விவகாரங்களில் இணைத் தலைமைகள் கூட உறுதியாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பின்னடிக்கின்றமை ஏன் என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது எனத் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அரசியல் வழித் தீர்வுக்காக சில நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து நிற்கையில், ஏன் மற்றைய சில நாடுகள் இலங்கை அரசுக்கு இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி அதன் போர் முனைப்புப் போக்கைத் தூண்டிவிடுகின்றன? இதுவே தமிழர்களுக்குப் புரியாத புதிராக உள்ளது என்கிறார் தமிழ்ச்செல்வன்.

சர்வதேசத்தைப் பார்த்து ஒட்டுமொத்த ஈழத் தமிழினம் எழுப்பும் வினாவும் இதுதான்.

இலங்கைக்கு இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கி, அதன் மூலம் சிங்கள அரசின் போர்முனைப்புப் போக்கை ஏன் ஊக்கப்படுத்தித் தூண்டி விடுகிறீர்கள்? இராணுவவழித் தீர்வை நிராகரிப்பதாகக் கூறிக்கொண்டு - அமைதி வழி அரசியல் தீர்வை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டு - தமிழர் மீதான கொடூர யுத்தத்துக்கு ஏன் ஒத்துழைத்து, உதவிபுரிந்து, வசதி செய்கிறீர்கள்?

இலங்கைத் தேசிய இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகம் ஒரு பக்கம் சாராமல் - சிங்களப் பேரினவாத அரசின் இராணுவத் தீர்வு முனைப்புக்கு ஊக்கமளிக்காமல் - நடுநிலையாக நடக்க முன்வருமானால் மட்டுமே இவ்விவகாரத்துக்கு நியாயத் தீர்வு கிட்டுவது சாத்தியம். உறுதி.

# சான்றுப் பொருள் மாற்றப்பட்டுள்ளது; புதிய விசாரணைக்கு உத்தரவிடுக!

## 17 பேர் படுகொலை தொடர்பில் சர்வதேச சட்ட நிபுணர் குழு வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 27

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மூதூரில் மனித நேயப் பணியாளர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான புலன் விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டு ஒன்று சான்றுபொருள்களிலிருந்து அகற்றப்பட்டிருப்பதாக சர்வதேச சட்ட நிபுணர்கள் குழுவொன்று குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 5.56 கலிபர் துப்பாக்கிக் குண்டு ஒன்று அகற்றப்பட்டு அதனிடத்தில் வேறு மாதிரியான துப்பாக்கிக்குண்டு ஒன்று செருகப்பட்டிருப்பதற்கான அடையாளங்கள் தெரிவதாக இந்த வழக்கில் அவதானிப்பாளராகக் கலந்துகொள்ளும் பிரிட்டிஷ் சட்ட அறிஞர் மைக்கல் பேர்ன்பாம் தெரிவித்துள்ளார். இவர் சர்வதேச சட்ட நிபுணர்கள் ஆணைக்குழுவின் சார்பில் பார்வையாளராக இதில் பங்குகொள்கிறார்.

5.56 கலிபர் குண்டுகள் எம் - 16 ரைபிள்களில் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையின் சில விசேஷப் படைப்பிரிவுகளால் பயன்படுத்தப் படுபவை போன்றவை இந்த ஆயுதங்கள் என்று மேற்படி ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மூதூரில் பிரெஞ்சு மனிதநேய நிறுவனமான பட்டினிக் கெதிரான அமைப்பின் 17 பணியாளர்கள் அவ்வமைப்பின் அலுவலகத்தில் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். இக்கொலைகள் இன்னமும் துப்புத் துலக்கப்படவில்லை. அரசாங்க படைகளே இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால் தமது படைகளுக்கு இந்தக் கொலைகளில் எதுவிதத் தொடர்புமில்லை என்று அரசாங்கம் மறுத்து வருகின்றது.

சர்வதேச சட்ட நிபுணர்கள் ஆணைக் குழு விடுத்துள்ள அறிக்கையில் -

இப்புதிய தகவல் வெளியாகியுள்ள நிலையில் சம்பவம் தொடர்பாக புதிதாக பணிப்புரையொன்றை விடுக்கும் படியும், முழுமையான பாரபட்சமற்ற விசாரணைக்கு ஏற்பாடு செய்யும் படியும் கோரியுள்ளதுடன் சம்பந்தப் பட்டவர்களை நீதிவிசாரணைக்குட்படுத்துவதை உறுதி செய்யும்படியும் கேட்டுள்ளது.

பிரிட்டிஷ் சட்ட நிபுணர் கடந்த ஏப்ரலில் வெளியிட்டிருந்த தமது பிரதான அறிக்கையிலும் குண்டு மாற்றப்பட்டிருக்கும் தகவலை வெளியிட்டிருந்தார்.

(அ-ப)

## கற்கோவளப் பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல்

குடத்தனை, ஜூன் 27

பருத்தித்துறை, கற்கோவளம் பகுதி நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு தும்பளை மணியகாரன் சந்தியில் அமைந்துள்ள இராணுவமுகாம் பகுதியில் குண்டு வெடித்ததாகவும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனாலேயே கற்கோவளம் பகுதி நேற்றுப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. (அ-78-15)

# அல்லைப்பிட்டி படுகொலை விசாரணை ஆவணங்களை அனுப்புமாறு ஜனாதிபதி ஆணைக்குழு கேட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூன் 27

அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் கடந்த வருடம் மே மாதம் 13ஆம் திகதி 13 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை ஆவணங்களின் பிரதிகளை படுமோசமான சம்பவங்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு கோரியுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு எழுதிய கடிதத்தில் அந்த ஆணைக்குழுவின் செயலாளர் சம்பந்தப்பட்ட பிரதிகளை அனுப்புமாறு கோரியுள்ளார்.

இதுவரை நடைபெற்ற விசாரணைகளின் பிரதிகளையே ஆணைக்குழு கோரியுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

இந்த வழக்கின் விசாரணைகளை இனி மேற்கொள்வதற்கு மேலதிக நீதிவானாக இ.த. விக்னராஜாவை நீதிச் சேவை ஆணைக்குழு நியமித்துள்ளது.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்த நியமனம் குறித்து நீதிவானிடம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கின் ஆவணங்களை மேலதிக நீதிவானிடம் கையளிக்க ஊர்காவற்றுறை நீதிமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

(அ-1)

## பலாலி ஆசிரிய கலாசாலையில் மணி விழா நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 27

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர் மன்றம் நடத்தும் மணிவிழாவும் 'கலாவதி' நூல் வெளியீடும் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையில் நடைபெறவுள்ளன.

ஆசிரிய மாணவர் மன்றத் தலைவர் க. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஸும், சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதனும் கலந்துகொள்கிறார்கள்.

நிகழ்வில் ஆசியுரையை காலாசாலையின் முன்னாள் அதிபர் சோ. பத்மநாதனும் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும் ஆய்வுரையை யாழ். பல்லைக்கழக கல்வியியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணியும் நிகழ்த்துவர். (6ஆம் பக்கத்தில் மீள்பார்வை). (அ-1-202)

## தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கான மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

2005 - 2006ஆம் கல்வியாண்டுக்குத் தெரிவான மாணவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. அழைப்பிதழ்கள் கிடைக்காதவர்களை உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

### நாளை

ஆனி - 14 வியாழக்கிழமை
28.06.2007
திதி : திரயோதசி முன்னிரவு 06.36
நட்சத்திரம் : அனுசம்
பி.ப. 03.26
சுபநேரம் : 07.25 - 08.55
ராகுகாலம் : 01.25 - 02.55

# புலிகளிடம் ஜப்பானிய தயாரிப்பு ராடர் கருவிகளும் உண்டாம்

### பாதுகாப்பு அதிகாரிகள் வெளியிடும் ஊகம்

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஜப்பானியத் தயாரிப்பான ராடர் கருவிகள் உட்பட போர் சாதனங்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனப் போர் சாதனங்களே புலிகளிடமிருப்பதாகவே முன்னர் கருதப்பட்டதாகவும் இப்போது ஜப்பானிய தயாரிப்புகள் அவர்களிடம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் பருத்தித்துறைக் கடற்பகுதியில் இடம்பெற்ற கடும்சமரின் போது கைப்பற்றப்பட்ட புலிகளின் கடற்கலம் ஒன்றிலிருந்து அதிசக்திவாய்ந்த ராடர் கருவி மீட்கப்பட்டதை அடுத்து இந்த விவரம் தெரியவந்திருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சேதமாக்கப்பட்ட புலிகளின் கலனிலிருந்து ராடர் கருவியுடன் பல ஆயுதங்களையும் கைப்பற்றியிருப்பதாக கடற்படையினர் கூறுகின்றனர். (அ-ப)

# மடுமாதா திருவிழாக் காலத்தில் போர்நிறுத்தம் செய்யக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 27

ஜூலை 2ஆம் திகதி ஆரம்பமாகும் மடு மாதா திருவிழாக் காலத்தில் பக்தர்கள் அமைதியாக கலந்துகொள்ள உதவும் வகையில் தற்காலிகமாக போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும்படி போரில் சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளிடம் மன்னாரிலுள்ள கத்தோலிக்க தேவாலயத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போர்ச் சூழ்நிலை இருந்த போதிலும் மடுத் திருவிழா நடைபெறும் என்றும், பக்தர்கள் அதில் அமைதியாகக் கலந்துகொள்ளும் வகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தேவாலய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை வன்னி மாவட்ட ஐ.தே. கட்சி அமைப்பாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன செஞ்சிலுவைச் சர்வதேச குழுவுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் அரசாங்கத்தையும் தமிழீழவிடுதலைப் புலிகளையும் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்க வலியுறுத்து மாறு கேட்டுள்ளார். மடுமாதா திரு விழாவில் கலந்துகொள்ள வரும் மக்களின் வசதிக்காக மடுவுக்குச் செல்லும் பாதையைத் திறந்துவிடுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(அ-ப)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக 4 பெண்களுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

சட்டவிரோதமாக மின்சார விநியோகம் பெற்ற குற்றச்சாட்டில் 4 பெண்கள் உட்பட ஐவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் க. அரியநாயகம் உத்தரவிட்டார்.

நெல்லியடிப் பொலீஸாரின் உதவியுடன் மின்சார சபை அதிகாரிகள் கரவெட்டி, இராஜகிராமத்தில் நேற்றுத் தேடுதலில் ஈடுபட்டனர்.

அப்போது, சட்டவிரோதமாக மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஐவர் சிக்கினர். இவர்களில் நால்வர் பெண்களாவர்.

நெல்லியடிப் பொலிஸார் இவர்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள - சிறிபதியுடன் ரணில் வியாழனன்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூன் 27

அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கையில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ள எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற் கும் புதுக்கட்சி ஒன்றை உருவாக்கியிருக் கும் மங்கள, சிறிபதி ஆகியோருக்குமிடை யில் முக்கிய சந்திப்பொன்று எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள் ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பிற்காக ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை மங்கள, சிறிபதி ஆகியோர் ஏற்றுள்ளனர் என்றும் 28ஆம் திகதி சந்தித்துப் பேசஇணக்கம் தெரிவித்துள்ள னர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 28ஆம் திகதி காலை 10.30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவரின் அலு வலகத்தில் இச்சந்திப்பு இடம்பெறுவதற்கான அனைத்துஏற்பாடுகளும்செய்யப்பட்டுள்ளன.

அரசைக் கவிழ்க்கும் விடயத்தில் ஐ.தே.கட்சியும் மங்களவின் கட்சியும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருப்ப தால் இந்தப் பேச்சு பெரும்பாலும் வெற் றியில் முடிவடையும் என்று ஐ.தே.கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பேச்சில் எட்டப்படும் தீர்மானங்களின் படி இரு கட்சிகளும் அரசைக் கவிழ்ப்பதற் கான பாரிய திட்டங்களை ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்லும் என்று ஐ.தே. கட்சி வட்டாரங்கள் நேற்றுக்கூறின.

அரசைக் கவிழ்ப்பதற்காக ஜூலை 26 ஆம் திகதி முதல் ஐ.தே.கட்சி மேற்கொள்ள விருக்கும் போராட்ட நடவடிக்கையில் ஒன் றாக இப்பேச்சில் எட்டப்படும் தீர்மானங்கள் அமையும் என்று எதிர்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இம் மாதம் 23ஆம் திகதி குருநாகலில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான போராட்டத் தில் உரையாற்றுகையில், மஹிந்த அரசைக் கவிழ்ப்பதற்காக மங்களவைத் தன்னுடன் இணையுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பைத் தொடர்ந்தே இரு தரப்பினருக்கும் இடையே சந்திப்பு இடம்பெறவுள்ளது. (சி)

# இராணுவம் கிழக்கில் தான் விரித்த பொறிக்குள் தானே சிக்கும்!

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

இடம், காலம், சூழல் இவற்றுக்கு ஏற் பவே விடுதலைப் புலிகள் தங்களது இராணு வத் தந்திரோபாயங்களை வகுக்கின்றனர். கிழக்கில் தாங்கள் விரித்த பொறிக்குள் தாங்களே அகப்பட்டுக் கொண்டுவிட் டனர் என்பதை சிங்கள இராணுவம் விரை வில் உணர்ந்து கொள்ளும்.

- இவ்வாறு ஒரு செவ்வியில் தெரிவித் திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தற்போதைய நிலைவரம் தொடர்பாக அவர் 'தமிழ் நெற்' இணையத்தளத்துக்கு செவ்வி அளித்துள்ளார். அந்த செவ்வியில் கிழக்கின் தற்போதைய நிலைமையை தமிழ்ச்செல்வன் விளக்கியுள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:-

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடி யாது. நாங்கள் இடம், நேரம், சூழ்நிலை என்பவற்றைப் பொறுத்தே எங்களது இராணுவதந்திரோபாயங்களைதீர்மானிக்கின் றோம். கிழக்கில் வழமையாக நடப்பது இதுதான். இராணுவம் முன்னேறி இடங்க ளைக் கைப்பற்றுவதும், பின்னர் எங்க ளது எதிர்ச்சமர்களில் இழப்புக்களைச் சந்தித் பின்வாங்கி ஓடுவதும் அங்கு வழமையாக இடம்பெற்றுவருவதுதான். இதுதான் கடந்த கால வரலாறும் கூட.

எந்த மக்களும் தங்களது நிலங்களை அந்நிய இராணுவம் ஆக்கிரமிப்பதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் எப்போதும் தங்கள் சொந்தப் பாதுகாப்பைத்தான் விரும் புவார்கள். தாங்கள் விரித்த பொறிக்குள் தாங்களாகவே அகப்பட்டுக்கொண்டு விட்டனர் என்ற உண்மையை சிங்களப் படைகள் விரைவில் உணரும். - இவ் வாறு தமிழ்ச்செல்வன் கூறியிருக்கிறார்.

# சந்திப்புக்கு நேரம் ஒதுக்கக் கேட்டு ஜே.வி.பியினருக்கு மங்கள கடிதம்

கொழும்பு, ஜூன் 27

அரசைக் கவிழ்க்கும் நோக்கில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற் படத் திட்டமிட்டிருக்கும் மங்கள சமரவீர இது தொடர்பாக ஜே. வி. பியைச் சந்தித் துப் பேசவும் திட்டமிட்டுள்ளார்.

இச்சந்திப்பிற்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு கேட்டு மங்கள சமரவீர ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுக்குக் கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

நாட்டின் தற்கால அரசியல் நடவ டிக்கை தொடர்பாக அனைத்துக் கட்சி களுடனும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர நாம் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் உங்கள் கட்சியின் முக்கியஸ்தர்களுடனும் நாம் பேசத் திட்டமிட்டுள்ளோம். - எனக் குறிப் பிடப் பட்டுள்ளது. (சி)

## கொக்குவில் இளைஞரை காணவில்லை என முறைப்பாடு

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த இளை ஞன் ஒருவரைக் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை என்று அவரது தாயார் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொக்குவில் கிழக்கு, ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த த.சுகிர்தன் (வயது 23) என்பவர்கடந்த வெள்ளிக்கிழமை உறவினர் வீட்டுக்குப் போவதாகச் சென்றார். ஆனால் அவர்நேற்றுவரைவீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியிடம் யோசனை நேற்று கையளிப்பு

நாட்டைப் பாதுகாப்பதற்கு 20 அம்சங்களைக் கொண்ட யோசனை ஒன்றை ஜாதிக ஹெல உறு மய நேற்றுஜனாதிபதியிடம்கையளித்துள்ளது.

கட்சித் தலைவர் வண். எல்லாவல மேதானந்த தேரர் தலைமையில் சிரேஷ்ட பிரமுகர்களுடன் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளேயும் அலரிமாளிகை யில் ஜனாதிபதியைச் சந்தித்து இந்த யோசனையைக் கையளித்தனர். (1)

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளுக் குத் தீர்வு காண்பதற்கான விசேட சமாதா னப் பிரதிநிதியாக நியமிக்க உத்தேசிக்கப் பட்டு வருவதாகச் சொல்லப்படுகின்றது.

இன்று பிரதமராகப் பதவியேற்கும் கோடன் பிறவுணைச் சந்தித்த லண்டனில் வாழும் தமிழ்ப் பிரமுகர்கள் குழு தமிழர் களுக்குரிய நியாயமான உரிமைகள் கிடைக்க உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு கிடைப்பதற்குத் தமது முழுமையான பங்களிப்பையும் ஒத்துழைப் பையும் வழங்குவதாக அவர் அவ்வேளை உறுதியளித்து இருந்தார்.

இவர் ஈழத்தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரா வார். (அ-1)

## இலங்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொள்ள அவற்றை அனுமதிக்க வேண்டும்.

உலகத்தில் இலங்கைக்குரிய சரியான இடம் அளிக்கப்படவில்லை.

இங்கு நிலவும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைத்து, உலகில் தனக்குரிய சரி யான இடத்தைப் பிடிப்பதற்கு இலங்கை போராட வேண்டும் - என்றார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இங்கு நிலவும் பிரச்சினையைத் தீர்ப்ப தில் ஊடகங்கள் பெரும் பங்காற்ற முடியும். நாட்டில் உள்ள சமூகங்களை இணைக் கும் பாலமாக விளங்கக்கூடிய சக்தியும் திற னும் ஊடகங்களுக்கு உண்டு.

**தமிழ் ஊடகங்களின் போக்கு**

ஊடகங்களில் மிகக் குறிப்பாக தமிழ் ஊடகங்களில் இலங்கையுடன் பாகிஸ் தான் வைத்திருக்கும் உறவு முஸ்லிம்களை மையமாகக் கொண்டது என்ற கருத்தை பொதுமக்களுக்கு உண்டாக்கும் விதத்தில் தகவல், கருத்துக்கள் வெளியிடப்படுகின் றன.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடை யேயான தொடர்புகள் தமிழர்களின் போராட் டத்தை நசுக்கும் நோக்கம் கொண்டது என்ற தவறான கருத்தும் அவற்றில் வெளிப்படுத் தப்படுகின்றன.

இலங்கையுடன் நாம் உறவுகளை ஆரம் பித்த போது, அதனை ஒரு நாடு என்ற நிலை யில் வைத்தே அவ்வாறு செய்தோம். தனி ஒரு சமூகத்துடன் உறவாடும நோக்கத் துடன் அல்ல - என்றார் பாகிஸ்தானியத் தூதுவர். (அ)

## குரும்பிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்ல வீதியையும் சித்தாண்டி - பெரியமடு பாதையையும் துருப்புக்கள் வெற்றிகரமா கத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந் துள்ளன. தோல்வி கண்ட புலிகள், லவு னியா-ஆற்றுப்பாலத்தை சேதப்படுத்தி விட்டு வெளியேறியிருக்கிறார்கள். இதனை களத் தளபதிகள் ஊர்ஜிதப்படுத்தினார் கள்.

கிழக்கிலுள்ள தமது பலம்வாய்ந்த இறு தித் தளத்தை விட்டுப் புலிகளை துடைத் தெறிவதற்கான நிச்சயமான வெற்றிப் பாதை யில் இராணுவம் முன்னேறிச் செல்கிறது. - எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை -

தமிழீழ விடுதலைப் புலிகளின் இனங் காணப்பட்ட இலக்குகள் மீது இலங்கை விமானப்படை விமானங்கள் நேற்று குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன என்று தேசிய ஊடகப் பாதுகாப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை சுமார் 10.50 மணி யளவில் கிழக்கில் தொப்பிகல பிரதேசத் தில் புலிகளின் பகுதியை நோக்கி முன் னேறும் படையினருக்கு உதவியாக விமானங்கள் புலிகளின் இலக்குகள் மீது குண்டுவீச்சுகளை நடத்தியுள்ளன.

இதேவேளை, பிற்பகல் 2 மணியள வில் வடக்கில் மன்னார் சிலாவத்துறைப் பகுதியில் அமைந்திருந்த கடற்புலிகளின் தளங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவித்துள்ளது. (அ-சி)

## பேசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் பதிலுக்கு கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இளை ஞர் ஒருவர் கொல்லப்பட்டார் எனவும் தெரி விக்கப்படுகிறது.

சம்பவம் நடந்த இடத்தில் ரி -56 ரக துப்பாக்கியைப் படையினர் மீட்டுள்ள னர் எனக் கூறப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் சம்பவ இடத்திற்கு மன்னார் மாவட்ட நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். அத்துடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மன்னார் பொதுவைத்திய சாலையில் ஒப்படைக்குமாறும் உத்தர விட்டார்.

மேலும் எதிர்வரும் 19 ஆம் திகதி இந்நபரின் மரண விசாரணையை மன் னார் நீதிமன்றில் நடத்துமாறும் அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (சி)

## விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் விமானப் படை குறித்து நாங்கள் அசட்டையாக இருக்கக் கூடாது. இது விடயத்தில் உன்னிப்பாக அவ தானமாக இருக்க வேண்டும். எனினும் அவர்களின் விமானப்படை எங்களுக்கு ஆபத்தானது என்றில்லை.

இருந்த போதிலும் நாங்கள் நிலை மையை மிகுந்த கவனத்துடன் அவதா னித்து வருகிறோம். எந்த விதமான அசம் பாவிதமும் இடம்பெற்றுவிடாமல் தடுப் பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வரு கிறோம் - என்றார். (அ-1)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சி திணைக்களத்தைச் சேர்ந்த ஒருவருடையவர்க ளம் என்றும் அதிகாரிகள்கூறியிருக்கின்றனர்.

நேற்று அதிகாலை வேளையில் இந்த வாகனத்தின் பெற்றோல் தாங்கியை கழற்றி மாற்றிக்கொண்டிருந்த இருவரது நடவடிக்கை குறித்து சந்தேகம் கொண்ட சிவிலியன் ஒரு வர் 119 என்ற அவசர பொலிஸ் பிரிவுக்கு தொலைபேசி ஊடாக தகவல் கொடுத்ததை யடுத்தே இக்குண்டு மீட்கப்பட்டது என்று இராணுவம் கூறுகின்றது.

படையினரால் மீட்கப்பட்ட கிளை மோர் குண்டு பின்னர் குண்டு செயலிழக் கச் செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

குறிப்பிட்ட வாகனம் எதற்காக அவ் விடத் திற்கு வந்தது என்பது பற்றியும் இச்சம்பவத் திற்கும் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்ட இடத்துக்கு அருகில் இருந்த வீட்டு உரிமை யாளர்களுக்கும் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்தும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் ராஜகிரிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள னர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# மரண அறிவித்தல்கள்

## நகுலேஸ்வரன் கௌரிமலர்

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் துவாலி வீதி, உடுப் பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நகுலேஸ்வரன் கௌரிமலர் நேற்று (26.06.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா- ஜெயலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் நகுலேஸ்வரனின் அன்பு மனைவியும் விதுசன், மதுசன் ஆகி யோரின் அன்புத் தாயும் வாசுதேவன், நந்தரூபன், ஜெயரூபன் ஆகியோரின் சகோதரியும் திருமகளின் மைத்துனியும் திவியா வின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்வை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கனகரட்ணம் சத்தியானந்தசிவம் (ஜே.பி)

**(சத்தி மாஸ்ரர், பழமொழிச் செல்வன், தலைவர்- கமநலசேவை நிலையம், நல்லூர், முன்னாள் மாநகரசபை உறுப்பினர்)**

ஈச்சமோட்டையைச் சேர்ந்த கனகரட்ணம் சத்தியானந்தசிவம் நேற்று (26.06.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம்-செல்லமுத்து தம்பதி யரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற கனகத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் ஏழாலை வடக்கு சிவகுரு தம் பதியரின் மருமகனும் சிவபாதசுந்தரம், பத்மலோசனா, ஜோதீஸ் வரி (சித்த வைத்திய பகுதி, யாழ்.மாநகர சபை) ஆகியோரின் சகோதரனும் தவசீலன் (தவம் ஸ்ரோர்ஸ்), லயன் தவச்செல்வன் (பொறியியலாளர், செயலாளர், லயன்ஸ் கழகம், வடமராட்சி), தவநேசன் (ஆசிரியர், புனித சாள்ஸ் ம.வி.) ஆகியோரின் தந்தை யும் மாலினி (சித்த வைத்தியர்), ராஜலக்சுமி (இலங்கை வங்கி, நெல்லியடி), ஜெயந்தி (ஆசிரியை, யாழ்.புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் சுகிர்தா, சந்திரபாலு, அகல்யா, பிரியங்கா, அமரீசன், ஆதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்வினின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2007) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5429

தகவல்:
பிள்ளைகள்.


கணக்கீடு
P.பகீரதன்
A/L 2008
Paper Class
இருப்பு மதிப்பீடு
Wed, Thu-6-7 a.m
ஆரம்பம் Thu 6 a.m
I.B.S
கண்டுக்குழி

பௌதிகவியல் A/L
ஆனைக்கோட்டை அஸ்ரன் கல்வி நிலையம்
இணுவில் N.C.A.கல்வி நிலையம்
சங்கானை கேம்பிறிஜ் கல்வி நிலையம்
சுன்னாகம் சக்தி கல்வி நிலையம்
அளவெட்டி தர்மா கல்வி நிலையம்
வட்டுக்கோட்டை புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்
சுதுமலை புகழ் கல்வி நிலையம்
S.T.நிமல்ராஜ்
தொ.பே: 0776787911

மாபெரும்
இரசாயனவியல்
கருத்தரங்கு
NEW SCIENCE CENTRE
இல்
நாளை 9.30 மணி
(28.06.2007)
ஆரம்பம்
By: அன்புமுகன் B.Sc


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.